நமது செட்டிநாடு

மலர் 9 ✿ மணம் 11 ✿ ஸ்ரீசோபகிருது ஆண்டு ✿ பங்குனி ✿ மார்ச் 2024 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 9 ✿ Issue 11 ✿ March 2024 ✿ Rs.25

காசியில் அமையவிருக்கும் புதிய சத்திரத்தின் மாதிரித் தோற்றம்

Chettinad
Sarvalokaa Education
International School

Activities that nurture
children
holistically

- Archery
- Theatre
- Dance
- Instrumental Music
- Taekwondo
- Chess
- Soccer

ADMISSIONS
OPEN

ENQUIRE
FOR
DETAILS

044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org

Cambridge Assessment
International Education

நமது
செட்டிநாடு

மலர் 9 மணம் 11 மார்ச் 2024
ஸ்ரீசோபகிருது ஆண்டு பங்குனி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

இதழ் சந்தா விவரம்

ஓராண்டு	ரூ.300
இரண்டாண்டு	ரூ.500
ஐந்தாண்டு	ரூ.1250

கரு.மணிகண்டன்,
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284
(சந்தா செலுத்த, புதுப்பிக்க, விளம்பரம் செய்ய)

1) திரு.ஆர்எம்.வி.ராமசாமி
கோட்டையூர் : 94891 77006
2) திரு.MR.பழம் நாச்சியப்பன்
சென்னை : 97899 55526
3) திருமதி அரு.வள்ளிக்கண்ணு
திருச்சி : 75982 15797 / 99654 24996
4) திரு. ஆர்எம்.அழகப்பன்
கண்டரமாணிக்கம் : 98401 23931
5) திரு.விஆர்.பாலமுருகன்
கோவை : 97916 32421, 83000 51512
6) திருமதி வி.வள்ளியம்மை
கோவை : 88706 52054
7) திரு. A.R.முத்தழகப்பன்
சேலம் : 98421 82273
8) திரு. AL.தண்டாயுதபாணி
பெங்களூரு : 090368 62231

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

தோழமையோடு கூடிய உறவு மகிழ்வான வாழ்க்கைக்கு வரம்

குடும்ப உறவுகள், குறிப்பாக மாமியார் – மருமகள் உறவு பற்றி நமக்கு சில சமயங்களில் கடிதங்கள் வருவதுண்டு அவற்றில் இரு கடிதங்களில் மாமியார் மருமகளுக்கு இடையில் ஒற்றுமை இல்லாத போக்கு உள்ளது என்பதை பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்துள்ளனர். அந்த இரண்டு கடிதங்களிலும் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்கள் ஏறத்தாழ ஒன்றாகவே உள்ளன. தற்போது பையன்களுக்கு பெண் கிடைக்காத ஒரு சூழல் நிலவி வருவதால் பெண்ணை பெற்றவர்கள் திருமணம் செய்து கொடுப்பதற்கு பல்வேறு நிபந்தனைகளை விதிக்கின்றார்கள் என்றும் அதில் குறிப்பாக மணமகனுக்கு எவ்வளவு ஊதியம் இருக்க வேண்டும், எங்கு பணிபுரிய வேண்டும், திருமணத்திற்கு பின் தனிக்குடித்தனம் செல்ல வேண்டும்,உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர், சொத்து எவ்வளவு என்று விவரங்களை எல்லாம் தெரிந்து கொண்டு தங்களுக்கு ஏற்புடையதாக இருந்தால் திருமணத்திற்கு ஒத்துக் கொள்வதாக தெரிவித்திருக்கிறார்கள். மேலும் திருமணம் ஆகி செல்லும் தன் மகளுக்கு புகுந்த இடத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற ஆலோசனைகளை நல்ல முறையில் வழங்காத பெற்றோர்களும் உள்ளார்கள் என்றும் அந்த கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதனால் சில திருமணங்கள் மன முறிவில் கொண்டு விடுகின்றன என்றும் தெரிவிக்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்கள் படித்துள்ளார்கள். அதேபோல் அவர்களுக்கு இணையாக வேலையிலும் இருக்கின்றார்கள். ஊதியமும் பெறுகிறார்கள். பல குடும்பங்களில் பெண்கள் மட்டுமே ஓரிருவர் இருக்கக்கூடிய நிலையும் இருப்பதால் பெண்களைப் பெற்றவர்கள், தங்கள் பெண்கள் தங்களின் வயதான காலத்தில் உதவ வேண்டும் என்ற நியாயமான மனநிலையில் இருப்பார்கள். ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலையில் இன்றைய உலகம் பயணித்துக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு திருமணத்திற்கு தயாராக இருக்கும் ஆண்களும் சரி, பெண்களும் சரி, அவர்களை பெற்றவர்களும் சரி ஒரு மனதாக முடிவெடுத்து அந்த முடிவுக்கு ஏற்ப தங்கள் பிள்ளைகளின் திருமணத்தை நடத்த வழி வகுத்துக் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் அறிந்து முன்கூட்டியே ஒரு முடிவுக்கு வந்தால் திருமண வாழ்க்கை மனக்கசப்பு இன்றி இருக்கும். திருமணத்திற்கு பின் குடும்ப உறவுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பது பற்றிய புரிதல் கணவனுக்கும் மனைவிக்கும் சமமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்று உறவு முறைகளைத் தாண்டி, தோழமை என்பது மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தோழமை என்பது குடும்ப உறவுகளைத் தாண்டிய பிறரோடு தான் இருக்க வேண்டும் என்று இல்லை. கணவனும் மனைவியும் மனம் ஒத்த தோழனும் தோழியுமாக இருக்கலாம். மாமியாரும் மருமகளும் உற்ற தோழமையுடன் இருக்கலாம். மருமகனும் மாமனாரும் நல்ல தோழமையுடன் இருக்கலாம். எங்கெல்லாம் தோழமை உணர்வு மேலோங்கி இருக்கிறதோ அங்கெல்லாம் வாழ்க்கையினுடைய அனைத்து பரிமாணங்களும் சிறப்பாக அமையும். நமது உறவுகளுடன் நல்ல தோழமையை கடைப்பிடித்து உறவுகளை பலப்படுத்தி நமது வாழ்க்கையில் வெற்றி பெறுவோம். ♦

உலக மகளிர் தினம்

(அரு.இராமநாதன், சிதம்பரம்)

மனித உயிர்களை மகிழ்ந்து
சுமக்கும் கருவறைக் கோயில் அன்னை.
புகுந்த வீட்டில் புதுப்புது சுமைகளை
சுமந்து தேய்பவள் மனைவி.
கணவனை தெய்வமாய்
தினமும் காப்பவள் அவளே.
பெற்ற மக்களை பேணும்
உற்ற மகராசி அவளே.
பின்தூங்கி முன் எழும்
புண்ணியவதியும் அவளே.

இராமர் இருக்குமிடம் அயோத்தி
என்றாள் சீதைப் பொன்.
கோவலன் பழி தீர்க்க
மதுரையை எரித்தாள் கற்புக்கரசி கண்ணகி.
சைவம் காக்க தனித்து வென்றனள்
மங்கையற்கரசியார்
நாவுக்கரசரை மீட்டு எடுத்தனள்
திலகவதி, உடன் பிறந்த பெண்.

சம்பந்தர் முத்தி பெறுகையில்
கரம் பிடித்து நின்றனள்
தோத்திரப்பூர்ணாம்பிகை
சுந்தரர் தோழமை நாளும்
வளர பரவை, சங்கிலி நற்றுணை ஆயினர்.
திருநீலகண்டர் பேரின்பம் துய்க்க
பெருந்துணையானார் ரத்தினாசலை.

என்புருவாகி கையூன்றி
கயிலை ஏறுகையில்
அம்மைகாண் என ஈசனால்
அறிமுகம் உமையவளுக்கு
காரைக்கால் புனிதவதி

செல்ல மகன் சீராளனை
கூறாக கறி சமைத்து
அடியார்க்கு அமுதாக்க
சிறுத்தொண்ட நாயனார்க்கு
கைகொடுத்த காரிகையாள்
திருவெண்காட்டுநங்கை என்பாள்.

மூவுலகை மகன் ஆள
கோச்செங்கண் பிரசவத்தை
தலைகீழாய் தானிருந்து
தள்ளிவைத்து உயிர் துறந்தாள்
கமலவதி தாய்என்பாள்.

உள்ளே...

நகரத்தார் திருப்பணிகள் 06

டாக்டர் எம்.ஏ.எம்.ஆர் முத்தையா
ரூ. 15 லட்சம் நன்கொடை 08

அரிய நூல்களின் ஆலயம் கோவிலூர்
ஆண்டவர் நூலகம் 10

லெட்சுமி மெட்டல்ஸ் அழகப்பன் 12

பாடுவார் முத்தப்பர் விருது 14

இராம காவியம் 16

தொழில் தொடங்கலாம் வாங்க 19

திருமந்திரச் சுவை 22

U டியூப் தத்துவம் 23

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின்
பங்களிப்பு 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 28

கை மேல்மூட்டு அறுவைச் சிகிச்சை
நிபுணர் டாக்டர் ராம். சிதம்பரம் 31

கருணை 33

மனம் பணம் மந்திரம் 36

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் 37

நகரத்தார் சிகரத்தார் 39

அமேசான் மழைக்காடு 42

சந்தா படிவம்!..... 45

முன் அட்டையில்: காசியில் உருவாக உள்ள புதிய சத்திரம்

210 ஆண்டுகளுக்குப் பிறகு காசியில், நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களால் கட்டப்படவுள்ள புதிய சத்திரத்தின் திருப்பணி பூமி பூஜை 07.03.2024 அன்று நடைபெற்றது. அடிக்கல் நாட்டு விழா 21.04.2024 அன்று நடைபெற உள்ளது. நகரத்தார் பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு காசி விஸ்வநாதர் - விசாலாட்சி தாயார் அருள் பெற அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

காசிச் சத்திர நிர்வாக குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் [2023-26]

S. விஜயகுமார் V. விசாலாட்சி
பள்ளத்தூர்

Manufacturers, Wholesalers & Retailers

W 182 NORHT MAIN ROAD,
ANNA NAGAR WEST CHENNAI

Mob: 9383007477 / 044 4553 6003
web: www.vstardiamonds.com

SURAT | CHENNAI | MADURAI

நகரத்தார் திருப்பணிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

சொ.சொ.மீ.சுந்தரம்

68) திருக்களர் (Pincode - 614 014):

மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் உள்ள இத்திருத்தலம் பராசரமுனிவர், காலபைரவர், துர்வாசர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலமாகும். களரி என்றால் அரங்கம் என்று பொருள். துர்வாசருக்குச் சிவபிரான் களரியில் பிரமதாண்டவம் ஆடிக் காட்டியதால் இவ்வூர் களரி என்றழைக்கப் பெற்றுப் பின்னர் களர் ஆயிற்று. இறைவன் பாரிஜாதவனேஸ்வரர் என்றும், களர்மளை நாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இறைவி அழகேஸ்வரி என்றும், இளங்கொம்பன்னாள் என்றும் போற்றப்படுகிறாள். இது சம்பந்தரால் பாடப்பெற்ற திருத்தலமாகும். இங்குள்ள சிவாலயம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் குருபீடமான கோவிலூர் மடத்தின் ஐந்தாவது பட்டமாக வீற்றிருந்து அருளாட்சி நடத்திய வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் பெருமுயற்சியால், நகரத்தார் பொருளுதவி கொண்டு ரூ.3,50,000/- செலவில் திருத்தமாகத் திருப்பணி செய்யப்பெற்று விரோதிகிருது வருடம், சித்திரை 22-ஆம் நாள், (04.05.1911) முதல் குடநீராட்டு விழாக் கண்டது. இதன் பிறகு ஏழாம் பட்டம் மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் முயற்சியால் கோட்டையூர் க.வீ.சொ. அழகப்ப செட்டியார் ஆதரவுடன் ஸ்ரீமுக ஆண்டு, வைகாசி மாதம், 30-ஆம் நாள், (12.06.1933) இரண்டாவது குடநீராட்டுச் செய்யப் பெற்றது. இத்தலத்தில்,

1) ரூ.30,000/- செலவில் நகரத்தார்களால் திருக்களர் ஆண்டவர் எனப்படும் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் சமாதியும்,

2) ரூ.15,000/- செலவில் காரைக்குடி சா.நா.அ.அழ. குடும்பத்தினரால் பதினாறு கால் மண்டபமும்,

3) ரூ.60,000/- செலவில் காரைக்குடி பழ.வெ.ராம. குடும்பத்தாரால் ரிக் வேத பாடசாலையும்,

4) ரூ.6,000/- செலவில் காரைக்குடி ஆத.பழ. பழனியப்ப செட்டியாரால் யஜுர் வேத பாடசாலையும்,

5) ரூ.6,000/- செலவில் ஆத்தங்குடி சா.நா. நாச்சியப்ப செட்டியாரால் சாம வேத பாடசாலையும்,

6) ரூ.70,000/- செலவில் காரைக்குடி முத்து.அரு.மு. அருணாசலம் செட்டியார், பாகனேரி பெரி.அழ.மு. முத்துக்கருப்பன் செட்டியார் ஆகியோர்களால் தேவாரப் பாடசாலையும், குருபூசை மடமும்,

7) ரூ.8,000/- செலவில் காரைக்குடி ஆத. மெய்யப்ப செட்டியார், ஆத.லெ. ஆதப்ப செட்டியார் ஆகியோர்களால் பசுமடமும்,

8) ரூ.12,000/- செலவில் காரைக்குடி சா.நா.அ.சொ. வகையினரால் திருக்குளமும்,

9) ரூ.20,000/- செலவில் நகரத்தார்களால் வேதாந்த மடமும்,

10) ரூ.6,000/- செலவில் காரைக்குடி ஆத.மெ., ஆத.லெ.ஆத. ஆகியோர்களால் திருநந்தவனமும்,

11) ரூ.10,000/- செலவில் அழகாபுரி சி.சு. சுப்பிரமணியன் செட்டியாரால் வெள்ளிக் கேடகமும்,

12) ரூ.12,000/- செலவில் காரைக்குடி பழ.வெ. ராம., ஆத.மெ. ஆகியோரால் அம்மைக்குத் தங்க அங்கியும் அமைக்கப் பெற்றன. இப்பணிகள் 1933-ஆம் ஆண்டையொட்டி நடந்தவை.

திருக்களர் ஆண்டவர்:

கோவிலூர்த் திருமடத்தின் ஐந்தாவது மடாதிபதியான வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் திருக்களர் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டித் திருப்பணி செய்து, திருத்தேர் செய்து வைத்துத் திருக்குடநீராட்டும் மிகச் சிறப்பாக நடத்தியதால் இவரைத் திருக்களர் ஆண்டவர் என்று சைவப் பெருமக்கள் போற்றுகிறார்கள். இவர் புதுவயல்

அருணாசலம் செட்டியாருக்கும் - உமையாள் ஆச்சிக்கும் தவப்புதல்வராக 1848-ல் பிறந்தார். கோவிலூர் மடம் மூன்றாவது மடாதிபதியான கருணாநிதி சுவாமிகளின் மாணவராகி வேதாந்த நூல்களைப் பயின்று துறவறம் ஏற்று 1883-ல் கோவிலூர்த் திருமடத்தின் ஐந்தாவது மடாதிபதியானார். (நான்காவது மடாதிபதி இராமசாமி ஞானதேசிகர்) வீரசேகர ஞான தேசிகர் 28 ஆண்டுகள் அருளாட்சி நடத்தினார். இது கோவிலூர்த் திருமடத்தின் பொற்காலம் எனலாம். இவர் கோவிலூரில் திருநெல்லை அம்மை உடனாகிய கொற்றவாளீசர் திருக்கோயில் திருப்பணியை விரைவுபடுத்தி முடித்து 1908-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தார். இவரே சிறபக்கலை வல்லுநர் என்பதால் இக்கோயிலைச் சிற்பக் கருவூலமாக்கிக் கலைக் கோயில் ஆக்கினார். இத்திருப்பணிக்கு மூல முதல்வராக விளங்கிய முத்துராமலிங்க ஆண்டவர் வடிவத்தை அவர் தரையில் விழுந்து கும்பிடுவது போலக் கொடிமரத்திற்கு அருகே சிலையாக அமைத்தார்.

கோவிலூர் மடம் வேதாந்த மடம். இம்மடத்தின் குருபீடமாகக் கருதப்படுவது ஆதிசங்கரரால் நிறுவப்பெற்ற சிருங்கேரி மடம். திருக்களர் ஆண்டவர் இம்மடத்தைச் சேர்ந்த சிருங்கேரி சாரதாம்பாள் திருக்கோயிலைக் கருங்கற் கோயிலாக்க எண்ணினார். நகரத்தார் பெருமக்களிடம் பெருந்தொகை நன்கொடையாகப் பெற்று, இக்கோயிலைத் தமிழகக் கோவில் போலக் கட்டித் தந்து, சிருங்கேரி சங்கராச்சாரியாரின் பாராட்டுகளையும், மரியாதையையும் பெற்றார்.

இவர் திருக்களர் திருப்பணி செய்த போது ஒரு தேர் செய்தார். அதை வெள்ளோட்டம் இட ஏற்பாடு நடந்தது. தேருக்கு ஆடு, கோழி பலி கொடுக்க வேண்டும் என்று ஊர்மக்கள் கூறினர். வீரசேகரர் உடன்படவில்லை. தேரை இழுத்தார்கள். தேர் நகரவில்லை. எல்லோரும் பலியிட வற்புறுத்தினர். சுவாமிகள் திடமாக மறுத்தார். "ஆடு, கோழிகளைப் பலியிட்டால் அவைகளும் துன்புறும். அவற்றின் உறவுகளும் வருந்தும். நான் துறவி. எனக்கு உறவுகள் இல்லை. எனவே, பலியிட வேண்டும் என்று நினைத்தால் என்னைப் பலியிட்டு விடுங்கள்" என்று சுவாமிகள் கூறினார். ஊரார் இதைக் கேட்டு மனமுருகிக் கண்ணீர் விட்டுத் தேரை இழுக்க, தேர் அசைந்தது. எல்லோரும் மகிழ்ச்சியோடு இழுத்து வந்தனர். தேர் நிலைக்கு வந்தது. ஆண்டவன் கருணையை எண்ணிச் சுவாமிகள் தரையில் விழுந்து வணங்கினார். அவர் ஆன்மா அப்பொழுதே திருக்களர்ச் சிவபெருமான் திருவடிகளில் அமைதியடைந்தது. இது 1911-ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருநாளில் நடந்தது.

இதைப் பாராட்டிய காஞ்சிப் பரமாச்சாரியார் நூறாண்டு கண்ட சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், கல்கி தீபாவளி மலரில் வீரசேகரரின் வரலாற்றை வியந்து கட்டுரையாக எழுதினார். திருக்களர் ஆண்டவர் திருக்களர் சிவமாகவே மாறி விட்டார். தன்னுயிரைப் பணயம் வைத்துத் தேரிழுக்க நினைத்த பொழுதே ஈசன் திருவடி நிழலை அடைந்த வீரசேகர ஞான தேசிகர் புகழ் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவீசித் திகழ்கிறது.

69) திருவுசாத்தானம் (Pincode - 614 014):

முத்துப்பேட்டையிலிருந்து மன்னார்குடி செல்லும் வழியில் உள்ள இத்திருத்தலம் முத்துப்பேட்டை - கோயிலூர் என்றழைக்கப்படுகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற இந்தத் தலத்தில் பெரியநாயகி அம்மை உடனாகிய மந்திரபுரீஸ்வரர் அருள்புரிகிறார். சேது அணை கட்ட இராமர், சிவபிரானிடம் மந்திர உபதேசம் பெற்றதால் அவர் பெயர் மந்திரபுரீஸ்வரர் எனப்படுகிறது. உசாவுதல் என்றால் கேட்டறிதல். கடலில் அணை கட்டுவதற்கான வழிமுறைகளைச் சிவபிரானிடம் இராமர் கேட்டதால் இத்தலம் உசாத்தானம் ஆயிற்று. தலவிருட்சம் மாமரம். இங்கு விநாயகர் மாவிலையைக் கையில் ஏந்தியுள்ளார். மூலவர் சுயம்பு சதுர பீடத்தில் சொரசொரப்பாகவும், வெண்ணிறமாகவும் காட்சியளிக்கிறார். இங்குள்ள அம்மன் கோயில் கொத்தமங்கலம் அழ.அரு. காசிச் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றது.

70) திருத்தண்டலை நீணெறி (Pincode - 614 715):

தண்டலைச்சேரி என்று அழைக்கப்பெறும் இத்தலம் திருவாரூர் - திருத்துறைப்பூண்டிச் சாலையில் மணலி புகைவண்டி நிலையத்திற்கு அருகில் உள்ளது. சம்பந்தர் பாடிய இத்தலத்தில் அரிவாட்டாய நாயனார் முக்தி பெற்றார். ஞானாம்பிகை உடனாகிய நீள்நெறிநாதர் அருள்புரியும் இத்தலத்தில் கோச்செங்கட்சோழன் கட்டிய பழைய மாடக் கோயில் அழிந்து விட்டது. தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார் 1900-ல் இப்போதுள்ள கற்கோயிலைக் கட்டி விகாரி ஆண்டு, தை மாதம், 23-ஆம் தேதி (04.02.1900)-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தார். இதற்கு அப்பொழுது ஓர் இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இக்கோயிலில் அரிவாட்டாய நாயனார் வரலாறு கல் சிற்பங்களாக வடிக்கப் பெற்றுள்ளது. சுவாமிக்கு நாகாபரணம், அம்மனுக்கு வெள்ளிக் கவசம், தங்கச் செவ்வந்திப் பூமாலை ஆகியவை நகரத்தாரால் செய்து வைக்கப் பெற்றுள்ளன. படிக்காசுப் புலவர் இங்கு தண்டலையார் சதகம் பாடியுள்ளார். ஊரின் பெயர் தண்டலை. கோயிலின் பெயர் நீள்நெறி.

(திருப்பணிகள் தொடரும்)

ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பன் கோவில் கும்பாபிஷேகம்

டாக்டர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா அவர்கள் ரூ. 15 லட்சம் நன்கொடை

செட்டிநாடு அரச குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டின் பிரபல தொழிலதிபராக திகழ்ந்த டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார் அவர்கள் 1973 இல் சபரிமலைக்கு யாத்திரை மேற்கொண்டபோது சபரிமலையில் உள்ள கோவில் போன்ற ஒரு கோவிலை சென்னையில் கட்ட நினைத்தார். தனது தந்தை ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ராஜா அண்ணாமலைபுரத்தில் கோவில் கட்ட தானமாக வழங்கிய நிலத்தில் டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி செட்டியார் அவர்களால் 1982இல் ஐயப்பன் கோவில் கட்டப்பட்டது. பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட ஐயப்பன் விக்ரகம் (இயற்கையின் ஐந்து கூறுகளைக் குறிக்கும் ஐந்து விலைமதிப்பற்ற உலோகங்கள்), நாகர்கோவிலைச் சேர்ந்த சிற்பி ஸ்ரீ பட்டனாச்சாரியாரால் செய்யப்பட்டது. இந்த ஐயப்பன் விக்ரகம் 29 ஜனவரி 1982 அன்று ராஜா அண்ணாமலைபுரம் கோவிலில் நிறுவப்படுவதற்கு முன்பு நாகர்கோவில் கிருஷ்ணன் கோவிலில் இருந்து தமிழ்நாட்டின் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள ஐயப்பன் கோயில் (ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயம்) 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான கோயில்களில் ஒன்றாகும். கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலை போன்று, அதே வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்ட இந்த கோயிலில் அமைந்திருக்கும் 18 படிகளும் கூடுதல் சிறப்பாகும். இக்கோயிலில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் வரும் மார்ச் 27-ம் தேதி (புதன்கிழமை) 4-வது குடமுழுக்கு விழா விமரிசையாக நடைபெற உள்ளது. அன்று காலை 10.30-ல் இருந்து 11.30 மணிக்குள் ஐயப்பன் மற்றும் பரிவார தேவதைகளுக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. ஐயப்பன் கோவில் கும்பாபிஷேக யாகசாலை நிகழ்ச்சிகளுக்கான செலவினங்களுக்கு செட்டிநாடு குழுமம் சார்பாக டாக்டர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா அவர்கள் ரூ. 15 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

அரசர் முத்தையவேள் நற்பணி மன்றம் சார்பாக, மன்றத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் ஈட்டலும் காத்தலும் வகுத்தலும் என்ற கொள்கைகளைக் கடைபிடித்த ராஜா சர் அண்ணாமலை செட்டியார் திருவுருவம் கொண்ட 2024 நாள் காட்டியை வெளியிட்டுள்ளார். அதனை செட்டிநாடு குழும மேலாண் இயக்குநர் டாக்டர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா அவர்களை சென்னை செட்டிநாடு இல்லத்தில் சந்தித்து வழங்கினார். உடன் பேராசிரியர் மகள் உள்ளார்.

Opening Soon!

HOTEL PL GRAND

PLEASANT STAY

TT Nagar, 4th Street

KARAIKUDI

98421 62416, 97918 48265

A Group of

Sri Murugan Travel Agency

SRI MURUGAN TRAVEL AGENCY

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

அரிய நூல்களின் ஆலயம் கோவிலூர் ஆண்டவர் நூலகம்

தமிழ்ச் செம்மல் முனைவர் சே.குமரப்பன்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கோவிலூர் மடாலயத்தில் மிகச் சிறந்த நூலகம் ஒன்று உள்ளது. இந்த நூலகத்தில் 1840-ஆம் ஆண்டிலிருந்து பதிப்பித்த 40,700 நூல்கள் உள்ளன. கோவிலூரில் ஆதீனங்களாக இருந்தவர்கள் அவ்வப்போது நூல்களை வாங்கி படித்து வந்தனர். அவை தனித்தனியே அவர்கள் இருப்பிடங்களில் அலமாரிகளில் இருந்து வந்தன. 2002-ஆம் ஆண்டு ஒரு கட்டிடம் கட்டப்பட்டு அந்த இடத்தில் அனைத்து நூல்களையும் கொண்டு வந்து வைத்து நூலகம் தொடங்கப்பட்டது. இந்த நூலகம் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை செயல்படும். 15 ஆயிரத்து 600 நூல்கள் மின்னணு வடிவில் மாற்றப்பட்டுள்ளது. இந்நூல்களை கூகுள் தேடலில் கோவிலூர் ஆண்டவர் லைப்ரரி எனும் இணையத்தில் இந்நூல்களை படிக்கலாம்.

43 பிரிவுகளில் நூல்கள்:

சங்க இலக்கிய நூல்கள், இதிகாச நூல்கள், தமிழ் வேதாந்தம், ஆன்மிக தலைவர்கள் பற்றிய நூல்கள், கோவிலூர் வேதாந்தம், உபநிஷதம், மதங்கள், யோகா, தியானம், பஞ்சாங்கம், ஜோதிடம், கட்டிடக்கலை கணினி நூல்கள், வேளாண்மை, அகராதிகள், மருத்துவம், மனோதத்துவம், ஆன்மிக நூல்கள், மதங்கள், புராணங்கள், ஆகமம், தல புராணம், பயண நூல்கள், மகான்களின் வாழ்க்கை பற்றிய நூல்கள், விழா மலர்கள், பக்தி பாடல்கள், தோத்திரங்கள், மதங்கள், சாதுக்கள். தல வரலாறு, நகரத்தார் பற்றிய நூல்கள் என 43 பிரிவுகளில் நூல்கள் உள்ளன.

காந்திஜி தலைவர்களுக்கு, அரசாங்கத்திற்கு என எழுதிய கடிதங்கள், அவரது வாழ்க்கை குறிப்பு பற்றிய நூல்கள் உள்ளன.

புராண நூல்கள்:

கோவிலூர் புராணம், சிவபுரி புராணம், திருச்சுழி புராணம், மயூரகிரி புராணம், காளையார் கோவில் புராணம், திருக்கோஷ்டியூர் புராணம், ஸ்ரீரங்கம் புராணம், சீர்காழி புராணம், ராமேஸ்வரம் புராணம், வயிரவன் கோவில் புராணம், மாங்காடு புராணம், கட்சியப்ப முனிவர் புராணம், பேரூர் புராணம், சிதம்பரம் புராணம், திருக்குற்றாலம் புராணம், திருவெற்றியூர் புராணம், ஆவுடையார் கோவில் புராணம் என 47-க்கும் மேலான புராண நூல்கள் உள்ளன.

பயண நூல்கள்:

கைலாய யாத்திரை, பசுபதிநாத் யாத்திரை, காசி யாத்திரை, இந்து சமய அறநிலையத்துறை வெளியிட்ட பயணியர் கையேடு, தென்னிந்திய ஷேத்திரங்கள் என்னும் நூல், வி.வி சிங் எழுதிய கேதார்நாத் - பத்ரிநாத் - கங்கோத்ரி எனும் ஆங்கில நூல், வேங்கடம் முதல் குமரி வரை, வேங்கடம் முதல் காவேரி கரை வரை எனும் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் எழுதிய நூல்கள், சித்பவானந்தர் எழுதிய திருக்கயிலாய யாத்திரை போன்ற பல வகையான 180-க்கும் மேற்பட்ட பயண நூல்கள் உள்ளன.

அகராதிகள்:

உ.வே.சா. எழுதிய தொகை அகராதி, பெயர் அகராதி, கழகத் தமிழ் கையகராதி, சான்ஸ்கிரிட் தமிழ் அகராதி, இங்கிலீஷ் - இந்தி அகராதி, இங்கிலீஷ் - சான்ஸ்கிரிட் அகராதி. 1935-ஆம் ஆண்டு சங்கரலிங்க முதலியார் அவர்களால் வெளியிடப்பட்ட ஜூபிலி

தமிழ் பேரகராதி. இந்த அகராதி 1386 பக்கங்களைக் கொண்டது. இந்த அகராதியில் பெயர் அகராதி, பொருளகராதி, தொகை அகராதி, குறிர் கீழ் எழுகை, நெடிற் கீழ் எழுகை என்ற பகுதிகள் உள்ளன. மொத்தம் 88 அகராதி நூல்கள் உள்ளன.

கருத்தரங்க நூல்கள்:

திருக்கோவில் கருத்தரங்கம், 96 ஊர் நகரத்தார் மாநாட்டு கருத்தரங்கம், கம்பராமாயணம் மாநாடு, தொல்காப்பிய மாநாடு, திருக்குறள் மாநாடு, ஆன்மிக மாநாடு மற்றும் பல மாநாட்டு கருத்தரங்குகள் பற்றிய நூல்கள் உள்ளன.

சிற்பக்கலை நூல்கள்:

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் எழுதிய இந்திய கலைச்செல்வம், திருவு சாத்தனா கல்வெட்டுக்கள், ஆலய நிர்மாண சிற்ப நூல், இந்து கலாச்சாரமும் கோவில் சிற்பங்களும், தமிழகத்தில் கோபுர கலை மரபு, தஞ்சை பெரிய கோயில் சாஸ்திரம், வி. கணபதி ஸ்தபதி எழுதிய சிற்ப சாஸ்திரம் தொகுதிகள், கல்வெட்டியல், எலிமெண்ட்ஸ் ஆஃப் ஹிந்து ஐக்னோகிராபி (Elements of Hindu Iconography), இந்திய சிற்பங்கள், பல மாவட்ட கல்வெட்டுக்கள், டெம்பில்ஸ் ஆப் ஸ்பேஸ் சயன்ஸ் (Temple Of Space Science), டாக்டர் வை. கணபதி ஸ்தபதி எழுதிய திராவிடியன் டெம்பிள் ஆர்கிடெக்சர் (Dravidian Temple Architecture), திருத்தேர் வெள்ளோட்டம் என 180 நூல்கள் உள்ளன.

நகரத்தார் பற்றிய நூல்கள்:

96 ஊர் நகரத்தார் மாநாடு, 96 ஊர் நகரத்தார் மகளிர் மாநாடு, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணிகள், அலை கடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலய திருப்பணிகள் (சோம. லெ) நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு (அ. ராமநாதன் செட்டியார்) நகரத்தார் திருமண முறை, நகரத்தார் திருமண நடைமுறை, நகரத்தார் பழக்க வழக்கங்களும் பண்பாடும், நகரத்தார் மரபும் பண்பாடும், நகர கோயில்கள், தேவார திருத்தலங்களில் நகரத்தார் செய்த திருப்பணிகள், நகரத்தார் அறப்பட்டயங்கள், நகரத்தார் பற்றி 1111 தகவல்கள், நகரத்தாரில் முதன் முதல், நகரத்தார் வரலாறும் பண்பாடும் பற்றிய 121 நூல்களும், நகரக் கோவில்கள் பற்றிய 389 நூல்களும் உள்ளன. இவை தவிர பல்வேறு கோவில் குடமுழுக்கு விழா மலர்கள், நகரத்தார் விழா மலர்கள் உள்ளன. 511 சமஸ்கிருத நூல்கள் உள்ளன. 108 வகையான தமிழ் இதழ்கள் 11 வகையான ஆங்கில இதழ்கள் உள்ளன.

கோவிலூர் மடாலய வெளியீடுகள்:

கோவிலூர் வேதாந்த மரபு நூல்கள் பதினைந்து இவை தவிர நாச்சியப்ப சுவாமிகள் தொடங்கிய கலாஷேத்ரா பதிப்பகத்தின் மாண்டிசோரி கல்வி தொடர்பான 20 நூல்கள், ருக்மணி தேவி அருண்டேலின் பரதநாட்டியம் பற்றிய நூல்கள், சித்தன்னவாசல், பணமலை, தஞ்சாவூர் சோழர் கால ஓவியங்கள், சுசீந்திரம் டெம்பிள், அடையார் ஆறு, தி ஹோலி ஹிமாலயாஸ், Fragrance of the Heart Encounters, போன்ற நாச்சியப்ப ஸ்வாமிகள் எடுத்த வண்ண புகைப்படங்கள் அடங்கிய நூல்கள், வெளிநாட்டில் வாழும் குழந்தைகளுக்காக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட 63 நாயன்மார்கள் பற்றிய எட்டு புத்தகங்கள் கொண்ட தொகுப்பு, திருவிளையாடற் புராணம், ஆழ்வார்கள், ஆதிசங்கரர் பற்றிய எளிய ஆங்கில நூல்கள் மற்றும் சங்க இலக்கிய நூல்கள், மூலம், மூலமும் உரையும், மாணவர்களுக்கான திருக்குறள், கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி, மூதுரை, திருமந்திரம் போன்ற 15 நூல்கள் வாழ்வியல் விஞ்ஞானம் பற்றிய நான்கு நூல்கள் ஆன்மிகம் பற்றிய 18 நூல்கள், சுவடி பாதுகாப்பு பற்றிய நூல், குறுந்தகடுகள், ஓலைச்சுவடிகள் உள்ளன.



ஆவணப் படங்கள்:

கோவிலூர் மடாலயம் தயாரித்த நகரத்தார் தாலாட்டு, ஒன்பது நகரக் கோவில்கள், பழனி பாதயாத்திரை, பட்டினத்தார் அற்புதத் திருவிழா, கோவிலூர் மடாலயமும், நாச்சியப்ப சுவாமிகளும் ஆகிய ஆவணப் படங்கள் உள்ளன. இவற்றை கோவிலூர் ஆண்டவர் லைப்ரரி எனும் யூடியூப் சேனலில் இலவசமாகக் காணலாம்.

தற்போது இந்த நூலகத்தை திரு. வெங்கடாசலம், திருமதி. சோமசுந்தரி, திருமதி. மீனாட்சி ஆகியோர் பராமரித்து வருகின்றனர். ♦

தேனம்மை லெட்சுமணன்

லெட்சுமி மெட்டல்ஸ் அழகப்பன்

காரைக்குடி - முத்துப்பட்டிணத்தில் பெயர் பெற்ற குடும்பம் வெள்ளைக் குதிரை சுப்பிரமணியம் செட்டியார் வீடு. 1972-இல் ஃபேன்ஸி மெட்டல்ஸ் ஆரம்பித்து வீட்டின் பின்புறத்திலேயே பட்டறையும், வீட்டின் முன்பக்கம் சில்வர் கடையும் நடத்தி வந்தவர் திரு. சுப்பிரமணியம் செட்டியார். இவர்கள் மனைவி திருமதி. மெய்யம்மை ஆச்சி. இவர்கள் திரு.இராதாகிருஷ்ணன் அவர்களை அழகப்பன் என்ற பெயரில் 1986-இல் சுவீகாரம் செய்து கொண்டார்கள். இவர் தேவகோட்டை திரு. டி.வி.வெங்கடாசலம் செட்டியார் - திருமதி உமையாள் ஆச்சி தம்பதியரின் புதல்வர் ஆவார்.

திரு.அழகப்பன் 1963 டிசம்பர், 8-ஆம் தேதி பிறந்தவர். சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் இளங்கலை கணிதம் பயின்றவர். பிள்ளை வளர வந்த இடத்தில் குடும்பத் தொழில் என்பதால் ஃபேன்ஸி மெட்டல்ஸ் மற்றும் சில்வர் பட்டறைத் தொழிலில் ஈடுபாடு கொண்டார். இவருக்குப் பிறந்த இடத்தில் ஒரு சகோதரரும், இரு சகோதரிகளும் உண்டு. மனைவி கானாடுகாத்தான் திரு. ராமனாதன் செட்டியார் அவர்களின் புதல்வி விசாலாட்சி. பிள்ளைகள் மூவர். இரு பெண் குழந்தைகள், ஒரு பையன். இவர்களுக்குத் திருமணமாகிப் பேரன், பேத்தி எடுத்து விட்டார்கள்.

சென்னை, கேரளா, மதுரை, கரூர், ஈரோடு, கோவை, திருச்சி போன்ற ஊர்களுக்கு இவர் 1972-இல் இருந்து சில்வர் சாமான்களைத் தயாரித்து விற்பனைக்கு அனுப்புகிறார். கிட்டத்தட்ட 51 ஆண்டுகளாகக் காரைக்குடியில் கோலோச்சி வருகிறது இந்த நிறுவனம். 1993-இல் தனது தந்தையாரின் மறைவுக்குப் பின் 1999-இல் ஃபேன்ஸி மெட்டல்ஸ் என்ற தனது நிறுவனத்திற்குத் தனது மூத்த மகளான லெட்சுமியின் பெயரைச் சூட்டியுள்ளார். சில்வர் தொழிலில் சிறப்பிடம் பெற்ற இவர்கள் தங்கள் சொந்தப் பட்டறையில் தயாரிக்கப்படும் பொருட்களை மட்டுமே விற்பனை செய்து வருகிறார்கள். நகரத்தாரில் மூன்று, நான்கு பேர்கள் மட்டுமே இத்தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

சில்வர் தொழில் பற்றி இவரிடம் கேட்டபோது, “சலீம் பட்டறை, கே.வி. நாதன் ஆகிய பட்டறைகள் காரைக்குடியில் முன்பு செயல்பட்டு வந்தன. இப்போது சில்வர் அடித்த சில பட்டறைகள் வெள்ளிப் பட்டறைகள் ஆகிவிட்டன. தேவி அன் கோவும் நாங்களும் மட்டுமே சில்வர் பட்டறையும், கடையும் வைத்துள்ளோம். தேவையான பொருட்களை எங்கள் பட்டறையிலேயே தயார் செய்து விற்கிறோம். திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு 100-லிருந்து 300 வரை மொத்த ஆர்டர் கிடைக்கும்” என்றார்.

இவர்களின் ஸ்பெஷாலிட்டி பரங்கிக்காய்த் தூக்கு. இங்கே தயாராகும் பொருட்கள் தரமாக இருப்பதால் அவை வாய் வார்த்தையாகவே நிறைய வாடிக்கையாளர்களைப் பெற்றுத் தந்துள்ளன. கல்யாணம், கிரகப்பிரவேசம், சாந்தி, போன்றவற்றுக்கும், முறைகளுக்குக் கொடுப்பதற்கும் இங்கே பரம்பரை பரம்பரையாக சாமான் வாங்குவோர் உண்டு. வரும் திருமண சீசனுக்காக சுமார்

ஆயிரம் வாளிகள் செய்து அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேலும் டிஷ் ப்ளேட், உயரச் சட்டி, பால் சட்டி, சம்படம், டப்பா, சொருகு சட்டி, மாவிளக்கு வாளி, பல சைஸ் சில்வர் வாளிகள் பரங்கிக்காய் தூக்கு மேலும் வேலைப்பாடு உள்ள சாமான்கள் போன்றவை இங்கே அடிக்கடி ஆர்டர் செய்து வாங்கப்படும் பொருட்கள்.

இத்தொழிலில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் பற்றிக் கேட்ட போது "இத்தொழிலில் பெரிய முன்னேற்றம் கிடையாது. நகரத்தார்க்கு நகரத்தார் ஆதரவு இல்லை. இந்த மாதிரி வேலைப்பாடு உள்ள பொருட்கள் செய்ய இப்போது ஆட்கள் இல்லை. 30 வருஷமாக இதற்கான ஆசாரிகள் அருகி வருகிறார்கள். 1990-இல் காரைக்குடியில் 100 பட்டறை இருந்தன. ஆயிரம் பேர் வேலை பார்த்தார்கள். இப்போது 15-லிருந்து 20 பட்டறைகள் தான் செயல்படுகின்றன. அதுவும் ஒரு பட்டறைக்கு இரண்டு, மூன்று பேர்தான் இருக்கிறார்கள். மொத்தமே 150 பேர்தான் இதில் வேலை செய்து வருகிறார்கள். அரசாங்கத்திலிருந்து இந்தத் தொழிலுக்கும், தொழிலாளிகளுக்கும் எந்தச் சலுகையும் இல்லை. இன்சூரன்ஸ் போன்றவையும் கிடையாது. முன்பு வாரக் கூலி கொடுத்தோம். ஒரு வாரம் பூரா பார்த்தாலும் கூலி என்று பார்த்தால் அவர்களுக்கு ஆயிரம், ரெண்டாயிரம்தான் கிடைக்கும். இதனால் சில தொழிலாளிகள் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு வேறு இடம் மாறிப் போய்விடுவார்கள்.

கொரோனா காலகட்டத்தில் ஓரளவு சமாளித்தோம். லாக்டவுன் சமயத்தில் சிறிது சிரமம்தான். முகூர்த்த மாதங்களில் நல்ல விற்பனை இருக்கும். ஆடி, மார்கழி, புரட்டாசி போன்ற மாதங்களில் டல்லாக இருக்கும். சில்வர் சாமான் விற்பனை மூலம் லாபம் என்று பார்த்தால் ஐந்து முதல் பத்துப் பர்சண்ட்தான் தேறும். லாபம் கம்மி என்றாலும் பட்டறை இருப்பதால் சொந்த விருப்பத்தின் பேரில் இத்தொழிலைத் தொடர்ந்து செய்து வருகிறேன்" என்றார்.

இதில் பயன்படுத்தப்படும் மூலப் பொருள் பற்றிக் கேட்ட போது ஜப்பான் ஷீட் சென்னையிலிருந்தும், சேலத்தின் ரீரோலிங் ஷீட்டும் பயன்படுத்தப்படுவதாகக் கூறினார். இந்த இரண்டுமே தரமானவை மற்றும் விலை அதிகமுள்ளவை. குஜராத் அகமதாபாத்தில் பட்டா (PATTA) என்னும் ஷீட்டும் பயன்பாட்டில் உள்ளது. முதலில் ஷீட் தேர்வு. அதன் பின் அதைத் தேவையான அளவு வெட்டிப் பொருளாக வெல்டு செய்வது, அதன் பின் அதைத் தட்டிச் சீர் செய்வது, பின்னர் பாலிஷிங் என்ற முறைப்படித் தயாராகிறது ஒவ்வொரு பாத்திரமும்.

இத்தொழிலில் உங்கள் முன்னோடி, வழிகாட்டி என்று யாரும் உண்டா என்ற கேட்ட போது "தந்தையார் தான் என்னுடைய முன்னோடி வழிகாட்டி, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் எவர்சில்வர் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவராகவும், காரைக்குடி சங்கத்தின் தலைவராகவும் இருந்தவர்கள் அப்பச்சி. தற்போது நான் காரைக்குடி எவர்சில்வர் உற்பத்தியாளர் சங்கத்தின் பொருளாளராக இருக்கிறேன் என்றார். எங்கள் நிறுவனத்தின் சாமான்கள் தரமானவை என்று பெயர் பெற்றுள்ளன. மேலும் இங்கே வாங்குவதால் ராசியாக உள்ளது என்று கஸ்டமர்கள் கூறுவதுதான் எங்களுக்குக் கிடைத்த சிறந்த விருது" என்கிறார்.

தற்போது இவர் மனைவியும் இவர் கூட தொழிலில் இணைந்து உதவி வருகிறார். பாப்பாத்தி படைப்பு, பொங்கல், ப.ராம. பங்காளிகளுடன் 150 வருடமாக கோவிலூர் சாமிக்கான மகர்நோன்பு சாமி அம்பு போடுதல், முத்துப்பட்டிணம் மீனாக்ஷி அம்மன் கோவில் ட்ரஸ்டி, நகரச் சிவன்கோவில் நகை டிரஸ்டி, அதலைக் கண்மாய் ஸ்ரீ வேட்டைக் காளியம்மன் திருவிழாக் கமிட்டியில் மெம்பர் என்று நீள்கின்றது இவரது தெய்வீகத் திருப்பணிகளின் பட்டியல்.

பாடுவார் முத்தப்பர் விருது பெற்றார் டாக்டர் சபா. அருணாசலம்

ஜெயங்கொண்ட சோழீசரும், சௌந்தரநாயகி அம்மையும் உடனமர்ந்து அருள் செய்யும் நேமம் கோவிலில் 09.02.2024 அன்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்தப் பேராசிரியர் டாக்டர் சபா. அருணாசலம் அவர்களுக்குப் பாடுவார் முத்தப்பர் விருது வழங்கிச் சிறப்பித்தார். ஆண்டுதோறும் பாடுவார் முத்தப்பருக்கு அபிசேகம் வழிபாடு செய்து அந்த நாளில் தமிழுக்கும், தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் விருதும், பொற்கிழியும் வழங்கிப் போற்றுவதை திரு.வி.என். சிதம்பரம் செட்டியாரும் அவரது மைந்தர்களும் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். இந்த ஆண்டு வி.என். சிதம்பரம் செட்டியாரின் புதல்வர் திரு.வி.என்.சிடி. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் முன்னிலையில் விழா சிறப்பாக நடைபெற்றது.

டாக்டர் சபா. அருணாசலம் மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றவர். பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்று, தங்கப் பதக்கம் வென்றார். தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 33 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி 2005-இல் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி நிறைவு செய்தார். 1000 மேடைகளுக்கு மேல் கவியரங்கம், பட்டிமண்டபம் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுள்ளார். தமிழுக்கும், நகரத்தார் சமூகத்துக்கும் இவர் ஆற்றிய பெருந்தொண்டு நகரத்தார் கலைக்களஞ்சியம் பணியாகும். தேவகோட்டையில் சேக்கிழார் விழாவைச் சிறப்பாக நடத்தி வருகிறார். ஸ்ரீ காளஹஸ்தியில் மிகப் பிரமாண்டமாகக் கட்டப் பெற்றுள்ள நகர விடுதி இவர் தலைவராக இருந்து உருவாக்கியதாகும். நகரத்தார் வரலாற்றில் என்றென்றும் இவர் பெயர் நிலைத்து நிற்கச் சான்றாக அமைந்துள்ளது திருக்காளத்தி நகர விடுதி. ♦

ஸ்ரீ காளஹஸ்தியில் நகரவிடுதி திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. அபிராமி ராமநாதன் அவர்கள் நகர விடுதியை திறந்து வைத்தார். திருச்சி நகரத்தார் சங்க முன்னாள் தலைவர் தொழிலதிபர் திருநாவுக்கரசு அவர்கள் புதுக்கணக்கு எழுதி முதல் மகமையை வரவு வைத்து நகரவிடுதிக் கணக்கைத் தொடங்கி வைத்தார். செயலர் உமா லாக்கர்ஸ் ராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் சபா. அருணாசலம் நகரவிடுதி உருவான வரலாற்றை எடுத்துரைத்தார். திருநாவுக்கரசு, கலைமாமணி அபிராமி ராமநாதன், நல்லம்மை ராமநாதன் ராங்கியம். சிவா, மாணிக்கம் ஆகியோர் உரையாற்றினர். விழாவில் திரளாக நகரத்தார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணமகள் வேண்டுகிறோம்

இளையாற்றங்குடி கோயில், கழனிவாசல் பிரிவு, நெற்குப்பை, ஆத்திக்காட்டார் வீடு, **சொ. இராமனாதன் செட்டியார்,** B.E., **சொ. மகேஸ்வரி ஆச்சி,** B.Com., அவர்களின் மகன், பெங்களூர் "MINDSPACE" நிறுவனத்தில் ஆர்க்கிடெக்டாக பணிபுரியும், ஆயில்யம் நட்சத்திரம், கடகராசி, 30 வயதான (07.11.1993), 168cm உயரமான வசதியான, **ஆர்க்கிடெக்ட் சொக்கலிங்கம்** என்ற **வெங்கடேஷ்,** B.ARCH., க்கு படித்த, களையான மணமகள் வேண்டுகிறோம்.

எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லை.

தொடர்புக்கு : **சொ. இராமனாதன் - 99622 84562**
சொ. மகேஸ்வரி - 97910 12726

சௌகரியமான நேரம் : காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

ADVT.

வணிக இலக்கிய எழுத்தாளரும், ஓசூர்வாழ் நகரத்தார் நலச்சங்க செயலாளருமான வலையபட்டி சு.பெரி. சோம. சுப. மீனாட்சி சுந்தரம் - சித்ரா தம்பதியினர் மகள் திருநிறைச்செல்வி வள்ளி மீனா B.COM, ACMA, (CS)க்கும் செட்டிநாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இணை பொது மேலாளர் காரைக்குடி திரு. ம. லெட்சுமணன் - அழகு சௌந்தரம் தம்பதியினர் மகன் திருநிறைச்செல்வன் லெ. அழகப்பனுக்கும், 11.02.2024 அன்று வலையபட்டி மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழக சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ்.ரகுபதி அவர்களும், ஓசூர், கரூர் வாழ் நகரத்தார்களும், உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். மணமக்கள் பல்லாண்டு வாழ்வாங்கு வாழ நமது செட்டிநாடு இதழ் வாழ்த்துகிறது.

இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)

பெயர் சூட்டு விழா

வேண்டுதல், வேள்வியால் வினைகள் கலைந்தன
நால்வகை தர்மம் நாட்டில் உண்டு
நல்லவை சூழ நான்கும் வேண்டும்
குலகுரு வசிட்டர் குழந்தைகள் கண்டார்
தர்மங்கள் நான்கை தவமாய் பெறவே
ராமன், பரதன், இலக்குவன்
தம்பி சத்துருக்கன் என பெயர் இட்டார்
மானிட உருவில் மகிமை சேர்க்கவே
தெய்வங்கள் பிறந்தன தசரதன் சிறக்கவே
உள்ளும் புறமும் அங்கும் இங்கும்
மக்கள் கூடி மகிழ்ச்சியில் திளைத்தனர்

(இரண்டாம் குரு) விஸ்வாமித்திரர் வருகை

பிறந்தது முதலே பிள்ளைகள் நால்வர்
உணர்வில் கலந்தே உயிராய் இருந்தனர்
அறிவு ஞானம் அற்புத கலைகள்
அனைத்தும் கற்றனர் அவர்தம் வழியில்
குலகுரு வசிட்டர் கூடவே இருந்தார்
குறைவில்லா தெளிவுடன் நால்வரும் சிறந்தனர்

அரசனாய் இருந்து ஆசானாய் உயர்ந்து
ஆளுமை கொண்டு யாகங்கள் செய்தார்
உலகில் உள்ள உயிர்கள் உய்ய
வேள்விகள் காக்க வேதனை குறைய
ஆள்துணை வேண்டி அரசனை காண
அரசபை வந்தார் ரிஷி விஸ்வாமித்திரர்

அரசர் வணங்க ஆன்றோர் வணங்க
அமர்ந்தார் ரிஷியும் ஆனந்தம் பொங்க

வந்தவர் நோக்கம் வசிட்டர் அறிவார்
தசரதன் மனத்தை தன்வயப் படுத்தி

இராமனை பிரியா இளவல் துணையுடன்
அவர்வசம் தந்து அனுப்பியே வைத்தார்
இருவரும் அவரை தொடர்ந்து செல்ல
எத்தனை அனுபவம் அருளப் பெற்றனர்
தெய்வப் பிறவி தெளிவாய் இருந்து
மானிட நெறியை மாற்றா திருந்தது

தாடகை சுபாகுவை மாரீசன் வருகை

சரயு நதியழகு எழில் சோலை கொஞ்சும்
பசுமை காட்டழகு படர்ந்த பசும் புல்லழகு
இதனை ரசித்தே இவர்கள் பின் தொடர
முன் செல்லும் முனியோ கண்கள் சுருங்க
கவலைப்பட்டார். பசுங்காடுகள் மாறி
பாறைகள் தெரிய
பாலம் பாலமாய் பாதைகள் விரிய
பகலவன் எரிக்க இருவரும் தொடர்ந்தனர்
இட்ட பணி முடிக்க
சூடுஉறைக்காது சுகங்கள் உணர
நல் சூட்சமமான ஸ்லோகங்கள்
சொல்லிக் கொடுத்தார் விஸ்வாமித்திரர்

வெடுவெடு வெடுவென, படுபடு படுவென
தடுதடு தடுவென தாடகை வந்தாள்

பூஞ்சோலையை புரட்டிப் போட்டவள்
புற்களைக் கூட தின்று தீர்த்தவள்
இராவணன் சொல்ல வேள்வியை அழிக்கவே.
கைகள் கால்கள் பெருத்த மரம்போல்
விரல்கள் அனைத்தும் கொழுத்த கிழங்காய்
உருவம் மலையென உயர்ந்து இருக்க
நின்றவள் வந்தாள் நிலமது அதிர

விஸ்வாமித்திரர் இராமனை நோக்கி
பெண்ணாய் வந்த பேயவள் மேல்
விடு கணை என்றார் வேள்வியை காக்க

கன்னிப்போரில் பெண்ணுடன் போரா
கலங்கினான் அண்ணல் சற்று
கவலையும் கொண்டான்
பெரும் பிழை செய்த பேயை கொல்லல்
தர்மமே அன்றி தவறேதும் இல்லை
வில்லை எடுப்பாய் அம்பைத் தொடுத்து
வேள்வியை காக்க அவளை கொல்வாய் (என்றார்).

அம்பை எடுத்தது கண்டார் இட்டது அறியார்
இமயம் விழுந்த இடியோசை கேட்டார்
சுபாகுவும் மடிந்தான் மாரீசன் ஆடிப்போனான்
விடுபட எண்ணி ஓடியே போயினர்
இறைவனை வேண்டி வேள்வி தொடர்ந்தது
இறையும் இளவலும் காவல் காக்க

(தொடரும்)

செட்டிநாட்டில் உள்ள பல்வேறு ஊர்களில் நகரத்தார் பொதுவிலும், நகரத்தார் வீடுகளிலும் ராமாயணம் படிக்கப்பட்டு வருகிறது. “செட்டிநாட்டில் ராமாயணம்” என்பது பற்றி நூல் எழுதுவதற்காக, இது தொடர்பான தகவல்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்ச் செம்மல் முனைவர் சே. குமரப்பன்
மல்லிகை இல்லம், 3, ரெகுநாதபுரம் மேற்கு,
தேவகோட்டை - 630 302
வாட்ஸ் அப் : 94434 42361
மின்னஞ்சல்: dr.kumarappan@gmail.com

27 கிளைகள், 36 வருட அனுபவம்

சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India
www.incredibleindia.org

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265

H.O. : 10, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1.

SPECIAL TOURS 2024

www.srimurugantravel.com

10 நாள் ஆக்ரா-காசி-அயோத்தியா மாதந்தோறும் 9,21 Rs.13500/-	2 நாள் மும்பை-ஸ்ரீரடி தினந்தோறும் Rs.14990/-	6 நாள் காசி அயோத்தியா Rs. 31990/-	6 நாள் சிங்கப்பூர் மலேசியா Rs. 81990/-	5 நாள் ஸ்ரீலங்கா Special Rs. 44990/-	5 நாள் துபாய்-அபுதாபி Rs. 74990/-
13 நாள் டெல்லி-ஆக்ரா அயோத்தியா மாதந்தோறும் 6,18,27 Rs.17500/-	4 நாள் கோவா SPL Rs.24990/-	8 நாள் பத்ரி-கேதார் வாரந்தோறும் ஞாயிறு Rs. 44990/-	5 நாள் சிங்கப்பூர் மலேசியா Rs. 73990/-	8 நாள் Exclusive ஸ்ரீலங்கா Rs. 64990/-	7 நாள் சௌத்கொரியா Rs. 1,69,990/-
6 நாள் ஸ்ரீரடி-பண்டரிபுரம் மாதந்தோறும் 1,8,15,22 Rs.8000/-	6 நாள் டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் வாரந்தோறும் வியாழன் Rs. 26990/-	12 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி வாரந்தோறும் திங்கள் Rs. 54990/-	10 நாள் சிங்கப்பூர்-மலேசியா தாய்லாந்து Rs.1,34,990/-	5 நாள் இந்தோனேசியா பாலி Rs. 64990/-	7 நாள் கென்யா Rs. 1,59,990/-
10 நாள் குஜராத்-துவாரகா பட்டேல்சிலை மாதந்தோறும் 17 Rs.17000/-	5 நாள் அந்தமான் ஹேவலோக் தினந்தோறும் Rs. 29990/-	6 நாள் முக்திநாத் நேபாள் ஏப்ரல் 1,18 மே 1,10,18 Rs. 69990/-	8 நாள் சிங்கப்பூர்-மலேசியா தாய்லாந்து Rs. 94990/-	7 நாள் வியட்நாம் கம்போடியா கலாங் விரிகுடா Rs. 1,24,990/-	9 நாள் ஆஸ்திரேலியா Rs. 2,94,990/-
17 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி மாதந்தோறும் 10,20 மே முதல் Rs. 30000/-	5 நாள் காஷ்மீர் குல்மார்க் வாரந்தோறும் புதன் Rs. 44990/-	6 நாள் பூடான் SPL வாரந்தோறும் செவ்வாய் Rs. 44990/-	8 நாள் துருக்கி Rs. 1,89,990/-	7 நாள் Exclusive சீனா Rs.1,54,990/-	11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து Rs. 5,29,990/-
13 நாள் பத்ரிநாத்-கேதார்நாத் மாதந்தோறும் 10,20 மே முதல் Rs.25000/-	5 நாள் டார்ஜலிங் கேங்டாக் வாரந்தோறும் புதன் Rs. 39990/-	8 நாள் காஷ்மீர் லே-லடாக் வாரந்தோறும் ஞாயிறு Rs. 64990/-	7 நாள் துபாய் Exclusive Rs. 1,09,990/-	10 நாள் ஹாங்காங் மக்காவ் Rs. 1,34,990/-	9 நாள் ஜப்பான் Rs. 2,94,990/-
14 நாள் முக்திநாத்-நேபாள் கொல்கத்தா மாதந்தோறும் 18 Rs.27000/-	7 நாள் NORTH EAST வாரந்தோறும் திங்கள் Rs. 44990/-	5 நாள் சிம்லா-குளு மணாலி வாரந்தோறும் புதன் Rs. 27990/-	4 நாள் பாங்காக் பட்டாயா Standard Rs. 49990/-	6 நாள் ரஷ்யா Special Rs.1,34,990/-	10 நாள் ஈரோப் Special Rs.2,54,990/-
15 நாள் நவஜோதிர்லிங்கம் மாதந்தோறும் 18 Rs. 20000/-	3 நாள் பூரி புவனேஸ்வர் வாரந்தோறும் வெள்ளி Rs. 24990/-	8 நாள் டெல்லி-மணாலி அமிர்தசரஸ் வாரந்தோறும் வியாழன் Rs. 34990/-	4 நாள் பாங்காக் பட்டாயா Basic Rs. 37990/-	4 நாள் எகிப்து Special Rs.1,29,990/-	5 நாள் அசர்பைஜான் Rs. 74990/-
10 நாள் சிம்லா-மணாலி ஆக்ரா ஏப். 1,8,15,22,29 மே 1,8,20,27 Rs. 18000/-	7 நாள் குஜராத் துவாரகா வாரந்தோறும் செவ்வாய் Rs.35990/-	8 நாள் காஷ்மீர்-அமிர்தசரஸ் டெல்லி வாரந்தோறும் ஞாயிறு Rs. 34990/-	5 நாள் புக்கட் கராபி Rs. 64990/-	8 நாள் எகிப்து Cruise Rs.1,59,990/-	4 நாள் உஸ்பெகிஸ்தான் Rs. 54990/-
8 நாள் டார்ஜலிங்க் கேங்டாக் ஏப்ரல் 1,18 மே. 1,10,18 Rs. 16000/-	13 நாள் அமர்நாத் ஜூலை முதல் Rs.16000/-	6 நாள் நைனிட்டால் முசௌரி - கார்பெட் வாரந்தோறும் புதன் Rs. 34990/-	8 நாள் Exclusive தாய்லாந்து Rs. 94990/-	4 நாள் மாலத்தீவு Special Rs. 59990/-	4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி Rs. 74990/-

SUMMER SUPER SAVER

8 நாள் சிம்லா-மணாலி அமிர்தசரஸ் 34990/- மட்டும்

காஷ்மீர்- அமிர்தசரஸ் வைஷ்ணவதேவி 34990/- மட்டும் 8 நாள்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

24 x 7 Calling Mobile : 98424 47305

சோலார் வில்லேஜ் அறக்கட்டளை சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

காரைக்குடி எஸ்.எம்.எஸ்.வி மேல்நிலைப்பள்ளிக்கு கண்டரமாணிக்கம் சோலார் வில்லேஜ் அறக்கட்டளை சார்பாக நவீன கல்வி உபகரணங்கள், கணினி ஆய்வகத்திற்கு 14 கணிப்பொறிகள், சூரிய மின் உற்பத்தி நிலையம், தொடுதிரை அகன்ற திறன் தொலைக்காட்சி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்பு மற்றும் 12 பள்ளிகளின் நூலகங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள்,காசி சத்திர மேலாண்மைக்கழகம், பழநி, காரைக்குடி விடுதிகளுக்கும், வேந்தன்பட்டி நந்தி கோயிலுக்கும் சூரிய மின்உற்பத்தி நிலையம் ஒப்புதல் கடிதம் ஆகியவை வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில் சோலார் வில்லேஜ் அறக்கட்டளைச் சேர்மன் டாக்டர் பி.என். நாச்சியப்பன் வரவேற்புரை ஆற்றி திட்ட அறிமுகம் வழங்கினார். பள்ளித் தாளாளர் சி.மெய்யப்பன் செயலர் உரையில் 110 ஆண்டுகளைக் கடந்து எளிய மாணவர்களின் வளர்ச்சிக்கு பள்ளி திறம்பட செயலாற்றுவதை நினைவு கூர்ந்தார். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி சிறப்புரையில், சோலார் வில்லேஜ் அறக்கட்டளை வாயிலாக வெளிநாடு வாழ் தமிழர்களின் நன்கொடையில் நான்கு கோடி ரூபாய் செலவில் 40 கிராமங்களுக்கு 1500 சூரிய மின்விளக்குகளும், 30 பள்ளிகளுக்கு நவீன உபகரணங்களும் வழங்கியுள்ள சோலார் வில்லேஜ் பவுண்டேசனைப் பாராட்டி ‘எனது பள்ளி எனது கிராமம்‘ என்ற சோலார் வில்லேஜ் அறக்கட்டளையின் திட்டத்தைத் துவக்கி வைத்து, அறக்கட்டளை வாயிலாக வெளிநாடு வாழ் தமிழர்கள் தங்கள் கிராமங்கள் வளர தொடர்ந்து உதவிட கேட்டுக்கொண்டார். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பள்ளி நலத்திட்ட உதவிகளைத் துவக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, வாழ்த்துரை வழங்கினர். பள்ளி மேல்நிலை வகுப்புகள் நிர்வாகக்குழுச் செயலர் எஸ்.பெரியணன் நன்றி கூறினார். நிகழ்வில் சோலார் வில்லேஜ் அறக்கட்டளை சேர்மன் டாக்டர் நாச்சியப்பன் அவர்களுக்கு ‘கல்விச்சேவை செம்மல்‘ என்ற விருது அமைச்சர் எஸ். ரகுபதி அவர்களால் வழங்கப்பட்டது. நிகழ்வில் நன்கொடையாளர்கள் பாராட்டப்பட்டனர். விழா ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகக்குழுவும், ஆசிரிய ஆசிரியைகளும் செய்தனர். நிகழ்வில் பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், பல்வேறு பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

தொழில் தொடங்கலாம் வாங்க 63

சேதுராமன் சாத்தப்பன்

ஸ்டார்ட்அப் உலகம்

இனி இங்கு உட்கார்ந்தபடி வெளிநாடுகளிலும் விற்கலாம்

உலகளவில் மக்களிடம் எப்படி இந்திய பொருட்களை கொண்டு செல்வது, மேலும் வெளிநாடுகளில் இருக்கும் இந்திய மக்களை குறிவைத்து எப்படி விற்பனை செய்வது என்று பலரும் ரூம் போட்டு யோசித்துக் கொண்டிருக்கும் போது, இங்கு உட்கார்ந்தபடியே வெளிநாடுகளிலும் ஆன்லைன் மூலமாக விற்கலாம் என்பது தான் விஷேசம். அமேசான் இந்தியா உலக நாடுகளில் பெரும்பான்மையான நாடுகளுக்கு ஆன்லைன் மூலமாக விற்பது எப்படி என்று அமேசான் பல இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு கற்று கொடுத்திருக்கிறது. அதுவும் சென்ற ஒரு வருடத்தில் அதாவது 2023ம் வருடம் சுமார் ரூபாய் 64,000 கோடி மதிப்புள்ள ஏற்றுமதியை செய்து சாதித்திருக்கிறது. இது 2022-ம் வருடம் ரூபாய் 40,000 கோடி என்ற அளவில் தான் இருந்தது. 2025-ம் ஆண்டு இது ரூபாய் 160,000 கோடியை தாண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அமேசான் உலகின் பல நாடுகளுக்கு மற்றும் அங்கு வசிக்கும் இந்திய மக்களுக்கு ஆன்லைன் மூலமாகவே இந்தியாவிலிருந்து உங்கள் பொருட்களை விற்கும் வசதியை கொண்டு வந்துள்ளது. அப்படி நீங்கள் விற்கும் பொருட்கள் ஏற்றுமதி என்ற கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏற்றுமதி என்பது கடினமான தொழில், அதை நம்மால் செய்ய முடியுமா என்பதை உடைத்தெறியும் விதமாகத் தான் அமேசான் மூலமாக ஆன்லைன் ஏற்றுமதி கூடி வருகிறது. மேலும், செங்கடல் பிரச்சனைகள் இருந்தாலும், ஜனவரியில் சரக்கு ஏற்றுமதியின் வளர்ச்சி மூன்று மாதங்களில் அதிகபட்சமாக 3.2 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

1200 ஏற்றுமதியாளர்கள் ஒரு கோடிக்கும் அதிகமான ரூபாய்க்கு ஏற்றுமதி :

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யத் தொடங்கிய அமேசான், 2023-ம் வருடம் 64000 கோடி ரூபாய் ஏற்றுமதியை எட்டியுள்ளது. 2022-ம் வருடம் மட்டும் 1200 ஏற்றுமதியாளர்கள் ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான ஏற்றுமதியை அமேசான் ஆன்லைன் மூலமாக செய்துள்ளனர்.

ஏற்றுமதி ஆவணங்களுக்கு, ரிஜிஸ்டிரேஷனுக்கு உதவி

ஏற்றுமதியில் டாக்குமெண்டுகள் மிகவும் முக்கியமானவை. ரிஜிஸ்டிரேஷன், புராடக்ட், ஷிப்பிங், டாக்ஸ், பேமண்ட் ரெகன்ஸிலியேஷன் ஆகியவைகளிலும் வழிகாட்டுகிறது. இது ஏற்றுமதிக்கு மிகவும் முக்கியமானவை ஆகும். மேலும், ஏற்றுமதியாளர்களுடைய பொருட்களை வாங்கி, பாதுகாப்பாக ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் பேக்கிங் செய்து Amazon Fulfillment Centres வழியாக பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

அதிகமாக ஏற்றுமதி ஆகும் பொருட்கள்

அமேசானின் மிக அதிகமாக வளரும் ஏற்றுமதி வகைகளில் ஆடைகள், பொம்மைகள், வீடு மற்றும் சமையலறை பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தோல் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத தயாரிப்புகள் போன்ற பிற தயாரிப்புகளும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

எந்தெந்த நாடுகளுக்கு?

யூ.ஏ.ஈ., யுகே, கனடா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி போன்ற சந்தைகளைத் தவிர, இந்திய ஏற்றுமதிகளுக்கான அமேசானின் மிகப்பெரிய சந்தையாக அமெரிக்காவும் உள்ளது.

விற்பனை நிகழ்வு தினங்கள்:

2023இல் அமேசான் நிறுவனத்தின் விற்பனை நிகழ்வு தினங்கள் நாட்டிலிருந்து ஏற்றுமதிக்கு பலனளித்தன. இந்தியாவுக்கு வெளியே மூன்று பெரிய விற்பனை நிகழ்வுகளில் அமேசான் ஏற்றுமதியாளர்கள் பங்கேற்றனர்: ஜூலையில் பிரைம் டே, அக்டோபரில் பிரைம் ஃபால் டே மற்றும் நவம்பரில் Black Friday விற்பனை. இவை 40-70 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளன. சில பிரிவுகள் ஆண்டுக்கு 100 சதவீத வளர்ச்சியைக் கண்டன.

திறன் மேம்பாடு

அமேசான், கடந்த ஆண்டில், இந்தியாவின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் பல ஒப்பந்தங்களை செய்தது. கடந்த ஆண்டு நவம்பரில், அடையாளம் காணப்பட்ட 75 மாவட்டங்களில் MSME களுக்கான திறன் மேம்பாட்டு அமர்வுகள், பயிற்சி மற்றும் பட்டறைகளை இணைந்து உருவாக்குவதற்காக, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டு அதை செயல்படுத்த துவங்கியது.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த அதன் முதன்மையான ஸ்பவ் உச்சிமாநாட்டின் நான்காவது பதிப்பில், அமேசான் இந்திய ஏற்றுமதியை அதிகரிக்க ஒருங்கிணைந்த இந்தியா போஸ்ட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. தயாரிப்புகளை விரைவாக வழங்குவதற்காக ரயில்வேயின் அர்ப்பணிக்கப்பட்ட சரக்கு வழித்தடத்தை (DFC) பயன்படுத்திய முதல் இ-காமர்ஸ் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும் விபரங்களுக்கு: அமேசான் மூலமாக குளோபல் செல்லிங் பற்றி https://sell.amazon.in/grow-your-business/amazon-global-selling என்ற லிங்கை சென்று பார்க்கவும்.

இந்த மாத வழிகாட்டி கண்டவராயன்பட்டி சிவசுப்ரமணியன்

நகரத்தார்கள் கட்டிட கலையில் வல்லுநர்கள் என்பது உலகம் அறிந்தது. உலகத்தின் சிறந்த கட்டிட கலையை இந்தியாவிற்கு / தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்த பெருமை நம்மவர்களையே சேரும். அந்த வகையில் கட்டுமானத் துறையில் ஈடுபட்டிருக்கும் கண்டவராயன்பட்டி சிவசுப்ரமணியன் அவர்களைப் பேட்டி கண்டோம்.

அவரின் பேட்டி தொடர்கிறது...

எங்கு படித்தீர்கள், எப்படி கட்டிடத் துறைக்கு வந்தீர்கள் என்று கேட்ட போது?

அண்ணாமலை பல்கலைகழகத்தில் சிவில் இன்ஜினியரிங் 1989-ம் வருடம் முடித்து தந்தையாரின் நிறுவனத்தில் இணைந்தேன். அப்போது கட்டிடங்களை காண்டிராக்ட் முறையில் கட்டுவது மட்டும் எங்கள் நிறுவனம் செய்து வந்தது. அதில் மார்ஜின் மிகவும் குறைவாக இருந்ததால் ப்ளாட் புரமோஷன் துறையில் இறங்கினோம். அப்படித்தான் 2010-ம் வருடம் “SRISTI Builders” பிறந்தது.

தரம் என்பதில் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய தந்தையாரின் ஒரே தாரக மந்திரம். அதை இன்று வரை எங்களது நிறுவனம் கடைபிடித்து வருகிறது. சொந்தமாக ஒரு வீடு என்பது ஒவ்வொருவரின் கனவு. அந்த வீடு நியாயமான விலையில், தரமான பொருட்களுடன் இருக்க வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கும். அந்த எதிர்பார்ப்புகளை சிறப்பான வகையில் பூர்த்தி செய்வதால் தான் இன்று 600-க்கும் அதிகமான கட்டிடங்களை கட்டியுள்ளோம் என்பதில் மகிழ்வடைகிறோம். வீடுகள் குளிர்ச்சியாக இருக்க Porotherm Clay Brick உபயோகிக்கிறோம். சானிடரிவேர் Kohler ப்ராண்ட், புதிய முறையில் மழை நீர் சேகரிப்பு போன்றவை முக்கியமானவை. மொத்தமாக கூறப்போனால் நாங்கள் வீடுகளை விற்க விளம்பரம் செய்வதில்லை, எங்கள் முன்னாள் வாடிக்கையாளர்கள் எங்களின் சிறப்புகளை பற்றி கூறும் போது வீடுகள் தானாக விற்று விடுகிறது.

திருச்சியில் 2012-ம் வருடம் எங்கள் நிறுவனம் கட்டிய “ராம்ஸ் மாரீஸ்” 12 மாடிக் கட்டிடம் தான் அப்போது திருச்சியில் கட்டப்பட்ட கட்டிடங்களில் உயரமானதாக இருந்தது. இதனால் எங்களது பெயர் பலருக்கும் தனித்து தெரிய ஆரம்பித்தது. பின்னர் சென்னையில் மட்டும் ப்ளாட் / இடங்கள் என்று புரமோட் செய்ய ஆரம்பித்தோம்.

தற்போது பெரும்பாக்கம், திருவான்மியூர் ஆகிய இடங்களில் ப்ளாட்களும், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம் ஆகிய இடங்களில் Plot களும் ப்ரமோஷன் செய்கிறோம். பெரும்பாக்கத்தில் மட்டும் இதுவரை 250 ப்ளாட்கள் கட்டியிருக்கிறோம்.



உங்களுக்கு கிடைத்த பெரிய அங்கீகாரமாக எதைக் கருதுகிறீர்கள்?

எங்களின் quality ஆன கன்ஸ்டிரக்ஷனை பார்த்து முருகப்பா குழுமத்தின் கோரமாண்டல் கன்ஸ்டிரக்ஷன் கம்பெனி அவர்களின் இரண்டு ப்ராஜெக்ட்களை எங்களிடம் கொடுத்தது எங்களுக்கு கிடைத்த பெரிய அங்கீகாரம் ஆகும். அது போல செட்டிநாடு ஹாஸ்பிட்டல்ஸ் தங்களுடைய PG Apartment, Oncology Building, Admin Building ஆகியவைகளை கட்டும் பொறுப்பை எங்களிடம் கொடுத்தது ஆகியவை எங்களுக்கு கிடைத்த இன்னொரு அங்கீகாரம் ஆகும்.

இது தவிர NDTV., எங்களுடைய ப்ராஜக்ட்களை outstanding என்று அவார்ட் கொடுத்து கௌரவித்துள்ளது.

பொழுது போக்குகள் என்னென்ன?

புத்தகங்கள் படிப்பது, விளையாட்டு ஆகியவை என்னை ஆக்டிவாக வைத்திருக்கிறது என்றால் மிகையாகாது.

Nagarathar Chamber of Commerce (NCC) நகரத்தார்களிடையே வர்த்தகத்தை வளர்க்கவும், இளைஞர்களிடையே தொழில் ஆர்வத்தை தூண்டவும் பல செயல்களை செய்து வருகிறது. அந்த அமைப்பில் நான் ஆக்டிவாக இருக்கிறேன். அதன் மூலம் பல நல்ல காரியங்களை செய்ய முடிவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

குடும்பம் பற்றி

தந்தையார் திரு. சண்முகசுந்தரம் செட்டியார் அவர்கள் சொந்தமாக கட்டிட தொழிலுக்கு வருவதற்கு முன்பு முருகப்பா குழுமத்தில் வேலை செய்தார்கள். Sincere, Committed ஆகியவற்றிக்கு ஒரு உதாரணம் அவர்கள். தாயார் திருமதி சிவகாமி ஆச்சி.

மாமனார் கீழச்சிவல்பட்டியைச் சேர்ந்த திரு. ராமனாதன் செட்டியார் அவர்கள், மாமியார் திருமதி. சௌந்தரம் ஆச்சி அவர்கள்.

மனைவி டாக்டர் ஞானம், ரேடியாலஜிஸ்ட். சென்னையில் பணிபுரிகிறார். இரண்டு மகன்கள்.இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. மூத்த மகன் ராமு சுந்தரம் எங்கள் நிறுவனத்தின் Operations and Marketing பார்த்துக் கொள்கிறார். மனைவி ஐஸ்வர்யா, இன்ஜினியரிங் படித்துள்ளார்.

ஆவிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வாழ்வுக்கு வழிகாட்டும் தமிழ் என்னும் பொருண்மையின் கீழ் நான்கு நாள் பயிலரங்கம்

பொழிவாளர்: சொல்லோவியர், திருப்புகழ் உரைமணி,

செந்தமிழ்ப் பேரொளி **பேராசிரியர் சொ.சொ.மீ.சுந்தரம்**

28.03.2024 முதல் 31.03.2024 வரை
மாலை 6 மணி முதல் 8 மணி வரை

முதல் நாள் : அடியார் இடைஞ்சல் களைவோன்,

இரண்டாம் நாள் : சங்கத் தமிழின் தலைமைப் புலவன்

மூன்றாம் நாள் : சம்பந்தன் ஞானத்தமிழ்,
நான்காம் நாள் : திருவாசகம் என்னும் தேன்

உங்கள் இருக்கையை முன்பதிவு செய்ய தொடர்புகொள்ள
முனைவர் ம.பிரபாவதி - 9841426541

இடம் : ஏ.வி.எம் ஆடிடோரியம், ஆவிச்சி கல்லூரி
விருகம்பாக்கம், சென்னை - 92

இரண்டாவது மகன், சிவ சண்முகம் அமெரிக்காவில் Johnson Controls நிறுவனத்தில் பணிபுரிகிறார். மனைவி அபிராமி அட்வகேட் படிப்பு முடித்துள்ளார்.

தொழில் செய்ய விரும்பும் இந்த காலத்து இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

Passion, Integrity, Dedication, Honesty and Commitment ஆகியவைகளை என்னுடைய core value ஆக கருதுகிறேன். இதை என்னுடைய தந்தையிடம் இருந்து கற்றுக் கொண்டேன். இது என்னுடைய வாழ்க்கையில் மேலே செல்ல உதவியாக இருக்கிறது. தொழில் செய்ய விரும்பும் இளைஞர்கள் இவற்றை பின்பற்றினால் அவர்கள் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

Think Big
Innovate
Keep looking for Opportunities
Create Value
Consistent, Directed, Self-Motivated and Intelligent Effort.

நம்மிடையே aggressiveness இல்லை. இதை இளைஞர்கள் சரிவர கற்றுக் கொண்டு தொழிலில் பயன்படுத்த வேண்டும்.

நம்முடைய 5 வருட, 10 வருட, 15 வருட goal-களை set செய்ய வேண்டும். அதை achieve பண்ணுகிறோமா என்று அலசிப் பார்க்க வேண்டும், அதில் என்னென்ன தப்புகள் செய்திருக்கிறோமோ அதை திருத்திக்கொள்ள இது ஒரு வாய்ப்பாக இருக்கும்.

Physical activities-களில் (sports போன்றவற்றில்) நாம் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. நம்மை பிட்டாக வைத்திருக்க அது மிகவும் முக்கியம். ■

ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம் www.startupandbusinessnews.com

With Best Compliments from

JAHNAVI TRADING

5-9-22/8A, Adarsh Nagar,
Near New MLA Quarters,
Hyderabad Telangana -500063

குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 31 (வெகுளாமை)

302) செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற.

வலியார்முன் செல்லாது சினமெனினும் நாம்சினந்தால்
வலியாரால் நமக்குவரும் பெரும்தீமை நம்சினமும்
மெலியார்மேல் பாயுமெனில் மெலியார்க்கே பெருந்தீமை
மிகக்கொடிய சினத்தைநாம் முற்றாகத் துறந்திடுவோம்
சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லியைநாம் விட்டொழித்தால்
சிந்தையிலே அமைதிவரும் சேர்ந்திணைய உறவுவரும்
சினம்வேண்டாம் யாரையுமே அன்பொழுக அரவணைப்போம்
சினம்தீது செல்லிடத்தும் அல்லிடத்தும் அதைஅழிப்போம்.

305) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

தன்னைத் தானே காத்துக் கொள்ள
தனிவழி எனில்அது சினம்கொள் ளாமை
தன்னையே கொல்லும் ஒருவனின் சினம்எனில்
தடுத்து நிறுத்துன் சினம்கொளும் உணர்வை
தாறு மாறான சினத்தால் ஒருவன்
தன்னையே கொல்லும் நிலைக்கு ஆளாவான்
வீறுகொண் டெழுகிற கோபத்தை அடக்கு
வினயமாய்ப் பழகும் வித்தையை அறிவாய்.

309) உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

நினைப்பில் கூட கோபமில் லாதவன்
நினைத்ததை எல்லாம் அடையும் பெற்றியான்
நினைவு நல்லது கொள்ள வல்லவன்
நினைப்பில் எப்படிக் கோபம் உள்ளிடும்
உள்ளத்தில் சினத்தை ஓட விரட்டினால்
உண்மை ஒளியே மனமெலாம் நிறைந்திடும்
உள்ளத்தில் ஒளிவர மனமோ அமைதியில்
உருவா கிடுமா கோபம்அம் மனதில்.

310) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தை
துறந்தார் துறந்தார் துணை.

சினத்தால் மிகுந்தவன் செத்தவ னாவான்
சினத்தை விட்டவன் முற்றும் துறந்த
இணையிலாத் துறவிபோல் ஏற்றமாய் வாழ்வான்
இன்றே மனத்தின் சினத்தை விரட்டுக
துறந்தவர் என்றால் எதையும் துறந்தவர்
துறப்பது சினத்தையும் சேர்த்துத் தானே
துறந்த சினத்தினால் துறவிக்கு பெருமை
துறப்போம் சினத்தை துறவிபோல் வரும்புகழ்.

திருமந்திரச் சுவை – 33

'நான்' என்னும் எண்ணம்

பூங்குன்றம் இராமசாமி

'நான்' என்கிற எண்ணமே, 'நாம் கொண்டுள்ள ஆணவத்தின் விளைவுதான்!'

'என் வீடு....!. என் பணம்..!. என் வாகனம்...!' என்கின்றோமே!

அதன் மேலாகக் 'கோவிலுக்கு ஏன்... சுவாமிக்கே!' செய்யும் போதும் 'நான் செய்தேன்...! என் பெயரைப் போடுங்கள்....' என இறுமாந்து சொல்கின்றோமே? இஃது ஆணவத்தின் உச்சம்!

நம் உடலே அவன் கருணைதானே! அதைப் போல, நம்மிடம் உள்ள பணமும் நமது அன்று; நம் வினைக்கழிய அவன் அருளியதே! ஆனால், அவ்வழியிலும் வினையை மேலும் மேலும் ஈட்டிக் கொள்கிறோமே!

நம் முன்வினை அவ்வாறு இருப்பின் நாம் என்ன செய்ய முடியும்...?

நம் ஆணவத்தை விட்டால்தான் நமது உண்மைச் சொரூபம் நமக்கே தெரியும். அப்போதுதான் இறையின் உண்மை நிலை நமக்கே விளங்கும்.

மேலும், நம் வழி வேறு; இறை வழி வேறு; நமது வழி ஆணவத்தின் வழி. இறையின் வழி அருளின் வழி. இரண்டும் வெவ்வேறு.

நாம் நம் வழியை விடுத்து, இறை வழியை நம்வழியாய்க் கொண்டால், இறை நம்முள் விளங்கித் தோன்றும்.

மெய்யுணர்ந்தோர் உலகியலை நோக்காது, 'யான்' என்னும் செருக்கும் இன்றிச் 'சிவம்' ஒன்றையே நோக்கி நிற்பார். இதைத்தான் திருமூலர் சொல்கிறார்.

நானறிந்த அப்பொருள் நாடஇட மில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந் தெங்கும் தலைப்பட லாமே (10.3027)

'நான்' என்ற எண்ணம் நம்மிடம் இருக்கும் வரை அம் முழுமுதற் பொருளைக் காண இயலாது. நாம் நம் உடலை அறிந்து, நம் வழியை விடுத்து, அவன் அருள்வழிப்படின், இறை, 'அருள் வெளியாய், நம் உயிருக்குள் உயிராய், ஒண்சுடராய் நம்முள் பெருகி நிற்கும்'. அந்நிலையில் அதனை உணர்ந்து, அதனோடு எங்கும் நாமும் எங்கும் நிறையலாம்.

வான்: அருள்வெளி, விம்மிடும்: பெருகிடும். ஊன் அறிதல்: உடம்பில் உள்ள அனைத்து உறுப்பையும் 'நானில்லை' என உணர்தல். ✶

U டியூப் தத்துவம்

டாக்டர் சோம வள்ளியப்பன்

இது, நாம் இணையம் வழியாக பார்க்கிற யுடியுப் (You tube) பற்றியது இல்லை. ஆங்கில எழுத்து யூ (U) வடிவில் இருக்கிற கண்ணாடி குழாய் பற்றியது. அதை வைத்து ஒரு செய்தி.

அவர் ஒரு நிறுவனத்தில் தலைமைச் செயலதிகாரி. அவர் பெயரை குமார் என்று வைத்துக் கொள்வோம். பெரும் வருத்தத்துடன் இருந்தவர், என்னிடம் ஆலோசனை கேட்டு வந்தார். விவரங்கள் சொன்னார். மேல் விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டேன். பேசினோம். சில ஆலோசனைகள் சொன்னேன். போய்விட்டார். இப்பொழுது நன்றாக இருக்கிறார்.

அது என்ன ஆலோசனை? அப்போது தோன்றியதுதான் இந்த யுடியூப் விடயம்.

குமார் வேலை செய்து கொண்டிருந்தது, ராஜன் என்ற ஒரு இந்தியர் தொடங்கிய பன்னாட்டு நிறுவனம். அதற்கு, சென்னையிலும், அமெரிக்காவில் ஒரு நகரத்திலும் என இரண்டு இடங்களில் அலுவலகங்கள். அமெரிக்க நகரத்தில் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவும், சென்னையில் நிறுவனத்தின் உற்பத்தி பிரிவும் இயங்கின. எல்லாம் மென்பொருள் வேலைகள். குமார்தான் சென்னை அலுவலகத்தின் தலைவர், சி.இ.ஓ.

சொந்த நிறுவனம் தொடங்கிய ராஜன் சென்னை அலுவலகத்திற்கு வரும்போதெல்லாம், தலைமை அதிகாரி குமாரை அழைத்து, அலுவலகம் எப்படி இயங்க வேண்டும் என்பது குறித்துப் பேசுவார். சரியில்லாதவை குறித்து அதிருப்தி தெரிவிப்பார்.

நிறுவனத்தை தொடங்கியவர் ராஜன் என்பதால், அவரிடம் நன்மதிப்பு பெற விரும்பிய குமார் ஊழியர்களிடம் படு கண்டிப்புடன் நடந்து கொண்டிருக்கிறார். அதனால் ஊழியர்களின் பலரும் குமாரை ஒரு தொந்தரவாக பார்த்தார்கள். அவர்களுக்கு குமாரை பிடிக்கவில்லை. அதைத் தெரிந்து கொண்ட குமார் வருத்தங்களோடு என்னிடம் வந்தார்.

அவரது தேவை, அவர் ஊழியர்களால் விரும்பப்படும் தலைவராக வேண்டும் என்பது.அதற்காக அவர் வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் துறை தலைவர்களிடமும், ஊழியர்களிடம் நேரடியாக அவர் ஏன் குறிப்பிட்ட விதமாக நடந்து கொள்கிறார் என்பதை விளக்க முற்பட்டிருக்கிறார். அவரது விளக்கங்கள் எடுபடவில்லை.

நான் அவரிடம் கூறியது,

ஊழியர்கள் மனது ஒரு U வடிவ குழாய் போலிருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தக் குழாய்க்கு இரண்டு முகத்துவாரங்கள் இருக்கின்றன.

ஒன்றை 'ஏ' என்றும் மற்றதை 'பி' என்றும் வைத்துக் கொள்வோம். நீங்கள் இதுவரை செய்திருக்கும் அவர்களுக்கு பிடிக்காதவை எல்லாம் கசடுகள் போல அந்தக் குழாய்க்குள் போய் அதன் அடியில் தங்கியுள்ளன. உங்கள் விளக்கங்கள் எல்லாம் விரலால் எடுக்க முயல்வது போல. எடுக்க முடியாது. அவை அடியில் ஆழத்திற்குப் போயிருக்கின்றன.

நீங்கள் செயல்களை செயல்களால்தான் மாற்ற முயல வேண்டும். இனி நீங்கள் ஊழியர்களை மதிக்கும் விதம், அவர்களை புரிந்து கொண்டு பாராட்டி வேலை வாங்கும் விதம் தொடர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அவைகளும் உங்களது செயல்களே. அவை யு டியூபின் முகத்துவாரம் 'ஏ' வழியாக தொடர்ந்து போய், உள்ள கிடப்பனவற்றை 'பி' துவாரம் வழியே வெளியேற்றும்.

முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும். வைரத்தை வைரத்தால்தான் அறுக்கமுடியும் என்பது போல ஒருவர் மனதில் ஏற்பட்டிருக்கும் தவறான அபிப்ராயங்களை மாற்ற, மாற்று செயல்களால்தான் முடியும்.

புரிந்து கொண்டார். சில மாதங்கள் ஆனதுதான். ஆனால், வெற்றி கண்டார். ■

மகன்லால்
வைரம் & தங்கம்

We Offer Diamonds
Grade by
GIA

Authorised
Forevermark Jeweller
FOREVERMARK

MAGANLAL MEHTA & CO
Diamond & Gold Jewellery Private Limited

#51, AVM Building, Kallukatti
North, Karaikudi - 630 001

27/43, North Usman Road,
T.Nagar, Chennai - 600 017

we@maganlalmehta.com www.maganlaldiamonds.com

86 YEARS

CUSTOMER CARE
8881115555

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 5

ராதாகிருஷ்ணன் காசிநாதன்

லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

நமது செட்டிநாடு இதழ் எனக்களித்த வாய்ப்பின் மூலமாக இதுவரை இஸ்ரோ நகரத்தார் நால்வர் பற்றியும் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளையும் அறிமுகப்படுத்தினேன். ஐந்தாவதாக இந்த இதழில் இஸ்ரோ நகரத்தார் திரு. ராதாகிருஷ்ணன் காசிநாதன் அவர்களைப் பற்றி எழுத விழைகிறேன். பொதுவாகவே நகரத்தார்கள் என்றாலே அவர்களுக்குரிய கூர்ந்த அறிவுத் திறனும், செய்யும் தொழிலில் முழு ஈடுபாடும், நேர்மையும், தன்னடக்கமும் உண்டென்பது அனைவரும் அறிந்த ஒன்று. இஸ்ரோ நகரத்தார்களும் இந்த தன்னுள்ளே இயல்பாக விளைந்த (Inborn) குணநலன்களால் இஸ்ரோவின் பணிகளில் ஒரு தனித்தன்மையுடன் விளங்கி அனைவரின் பாராட்டையும் பெற்றிருக்கிறார்களென்றால் அது மிகையல்ல.

ராக்கெட் விஞ்ஞானம் உலகிலுள்ள விஞ்ஞானங்களிலேயே மிக கடுமையானது. சிறிய தவறு செய்தாலும் மன்னிக்கக் கூடியதல்ல (Unforgiving). நாம் ராக்கெட் என்று ஒருமையில் அழைத்தாலும் அதில் பல ஆயிரக்கணக்கான பாகங்கள் அடக்கம். இவை அனைத்தும் அவைகளுக்கு இட்ட பணிகளை செவ்வனே செய்தால் மட்டுமே ராக்கெட்டின் இறுதி வெற்றி சாத்தியமாகும். இந்த பாகங்கள் இரு வகைப்படும். 1. மின் சாதனங்கள் (Electronic Components). 2. இயந்திர சாதனங்கள் (Mechanical Components). இவைகளில் பல சாதனைங்கள் ராக்கெட்டை திசை திருப்புவதிலும் சரியான பாதையில் செலுத்துவதிலும் (Steering as per Guidance and Control Commands) ராக்கெட்டின் பல செய்முறை அளவுகளை (Performance parameters) குறிப்பிட்ட அளவில் வைத்திருப்பதிலும் அரும்பணியாற்றுகின்றன. இவைகளை எங்கள் மொழியில் Control Components என்று அழைப்போம். திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த பாகங்களை ஒன்று சேர்ப்பதிலும் அவைகளை சரியாக வேலை செய்வதற்கான பரிசோதனைகளிலும் மிகுந்த ஈடுபாட்டோடு பணி செய்திருக்கிறார்.

திரு. ராதாகிருஷ்ணன் மிக மென்மையான சுபாவம் உடையவர். (இஸ்ரோவில் உள்ள நாங்கள் அனைவருமே அப்படிப்பட்டவர்கள் தான். ஏனெனில் உணர்ச்சி வசப்படுவதற்கோ ஆத்திரப்படுவதற்கோ எங்களுக்கு நேரமில்லை. அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து வேலை செய்ய வேண்டிய நிலை (Team Spirit). ராதாகிருஷ்ணன் என் ஆப்த நண்பர். என் சொந்தக்காரரும் கூட. என் மைத்துனர் (என் மனைவியின் மூத்த சகோதரர்). நாங்களிருவரும் பள்ளி நாட்களை தேவகோட்டை தே பிரித்தோ பள்ளியிலும், Pre University நாட்களை காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியிலும் ஒன்றாகப் படித்தோம். பின்னர் அவர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் எலக்ட்ரிகல் பிரிவில்



ராதாகிருஷ்ணன் காசிநாதன் – லெட்சுமி என்ற கஸ்தூரி ராதாகிருஷ்ணன்



சுப்பிரமணியன் அண்ணாமலை, சீதாலட்சுமி சுப்பிரமணியன், மகேஸ்வரன் சுப்பிரமணியன்



சேவுகன் ராதாகிருஷ்ணன் என்ற கார்த்திக், நேஹா என்ற நேஹாலெக்ஷ்மி சேவுகன், மீனாட்சி சேவுகன்

தேர்ச்சி பெற்றார். ஆரம்ப காலங்களில் சென்னை பிலிப்ஸ் நிறுவனத்திலும், பின்னர் தமிழ்நாடு மின் வாரியத்திலும் பணியாற்றிய பின்னர் இஸ்ரோவில் சேரும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

இஸ்ரோவில் பங்களிப்பு

- இஸ்ரோவில் சேர்ந்தது 17/04/1970
- பணி – ராக்கெட் பாகங்களை (Components) ஒன்று சேர்ப்பதற்கும் (Assembly) அவைகளை பரிசோதிப்பதற்கும் (Testing) தேவையான உலகத்தரம் வாய்ந்த (State of the art) தொழிற்சாலைகளையும் சோதனைச்சாலைகளையும் (Facilities and Laboratories) உருவாக்கி இருக்கிறார். இவை திடநிலை (Solid) திரவ நிலை (Liquid) அதிகுளிர் நிலை (Cryogenic) ராக்கெட்களை பரிசோதிப்பதற்கு மிக உபயோகமாக இருந்தன. இவைகளுக்கான தொழில் நுட்பம் நம்மிடம் இல்லாத காலத்தில் இவைகளை இவர் நிர்மாணித்தது மிகுந்த பாராட்டுக்குரிய விஷயமாகும்.
- பாகங்களை ஒன்று சேர்ப்பதற்காகவும் தர நிர்ணயம் செய்வதற்காகவுமான நடைமுறைகளை (Assembly and Quality Procedures) SLV, ASLV and PSLV ராக்கெட்டுகளுக்கு உபயோகப்படுமாறு ஏற்படுத்தி இருக்கிறார். அவை இன்றளவும் உபயோகத்திலுள்ளன.
- திடநிலை ராக்கெட்டுகள் விண்வெளியில் செல்லும்பொழுது அவைகளை வழிநடத்தும் அமைப்புகளை (Control Systems) கண்டு பிடித்து நிர்மாணித்த குழுவுக்கு (Team Leader) தலைமை வகித்து இருக்கிறார்
- சிறந்த விண்வெளி விஞ்ஞானிகளாகிய டாக்டர் விக்ரம் சாராபாய், டாக்டர் அப்துல் கலாம் ஆகியோரின் நேரடிப் பார்வையில் பணி செய்யும் வாய்ப்பு பெற்று, அவர்களின் வாழ்த்தும் ஆதரவும் கிடைக்கும் பாக்கியமும் பெற்றவர். ■

ராதாகிருஷ்ணன் காசிநாதன் குடும்பம்

குடும்பம்

1. பெயர் : ராதாகிருஷ்ணன் காசிநாதன்
2. பிறந்த தேதி : 26/04/1945
3. வீட்டு பெயர் : உ.வீர.சேவு.சோம.சேவு.கா. வீடு (நாலு வீட்டார் வீடு)
4. பிறந்த ஊர் : சண்முகநாதபுரம் (ஆறாவயல்)
5. கோவில் : மாத்தூர் உறையூர்
6. பெற்றோர் : காசிநாதன் செட்டியார் – லெட்சுமி ஆச்சி என்ற சீதை ஆச்சி
7. மனைவி : லெட்சுமி ராதாகிருஷ்ணன் என்ற கஸ்தூரி
8. மகள் : சீதாலெட்சுமி சுப்ரமணியன் மாப்பிள்ளை சுப்பிரமணியன் அண்ணாமலை (கோட்டையூர்)
9. பேரன் : மகேஸ்வரன் சுப்பிரமணியன் UK-ல் Motor Sports Engineering Course படித்து வருகிறார்.
10. மகன் : சேவுகன் ராதாகிருஷ்ணன் என்ற கார்த்திக் Director @ Cognizant Technology Solutions, Singapore
11. மருமகள் : மீனாட்சி சேவுகன் Assistant Director@NTU President's Office, Nanyang Technological University, Singapore
12. பேத்தி : நேஹா என்ற நேஹாலெக்ஷ்மி சேவுகன், School Final in Singapore.

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 32

நார்த்தாமலையும் நகரத்தார்களும்

மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

நார்த்தாமலையிலிருந்து மற்ற இடங்களுக்கு இடப்பெயர்வு செய்தோர்கள் அனைவரும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்ற குடையின் கீழ் வந்திருக்க வாய்ப்பில்லை. வேறு பெயர் கொண்ட வணிகச் சமூகங்களாகவும் மாறி இருக்கலாம். ஆனால், நகரத்தார்களின் தொன்மையான வாழ்விடங்களில் நார்த்தாமலையும் ஒன்று என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

“நார்த்தாமலையில் நகரத்தார்கள் வசித்தனர், ‘நகரத்தார் மலை’ என்ற பெயரே ‘நார்த்தாமலை’ என்று பெயர் மாற்றம் பெற்றது” – என்ற கருத்துகளை நாம் செவிவழிச் செய்திகளாக கேட்டிருக்கிறோம். ஆனால், பூம்புகாரில் இருந்து நேரே செட்டிநாட்டுப் பகுதிக்கு இடப்பெயர்வு செய்தவர்கள் நகரத்தார்கள் என்ற கருதுகோளுக்குப் பழகிவிட்ட பலர் நம்மில் உள்ளனர். செட்டுநாட்டுப் பகுதிக்குத்தான் முதலில் வந்தனரா? அப்படியானால் நார்த்தாமலை நகரத்தார் வாழ்வில் எப்படி இடம் பெறும்? என்ற வினா எழுகிறது. இதற்கான விடை, தமிழகத்தின் பண்பாட்டுச் செழுமையின் ஒரு பகுதியாகவே அமைகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் இருந்து திருச்சி செல்லும் சாலையில் 18 கி.மீ. தொலைவில் நார்த்தாமலை உள்ளது. புதுக்கோட்டை – திருச்சி நெடுஞ்சாலையில் இருந்து இடது புறம் செல்லும் கிளைச் சாலையில் 7 கி.மீ தொலைவில் புகழ் பெற்ற நார்த்தாமலை முத்துமாரியம்மன் கோயிலைத் தாண்டி இந்தத் தொல்லியல் இடங்கள் உள்ளன.

நார்த்தாமலைப் பகுதி, கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை, பல்லவர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. அதன் பின்னர் சோழர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. சோழர்களுக்குப் பின் சிறிது காலம் பாண்டியர்களின் ஆளுகையிலும் இருந்திருக்கிறது.

ஏன் நார்த்தாமலை நகரத்தார்களுக்குத் தேவைப்படுகிறது?

நார்த்தாமலையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் தமிழக வரலாற்றின் பண்பாட்டுத் தொட்டில் என்றால் மிகையில்லை. நார்த்தாமலையைக் கடல் கொண்ட பூம்புகார் நகருக்கு இணையாகச் சொல்லலாம். ‘நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு’ என்ற இந்தத் தொடரில் நாம் அதிகமாக ஆய்வு செய்வது 1500 ஆண்டு கால வரலாற்றுப் பகுதிகளே. ஆனால் 1500 ஆண்டுகளுக்கும் முந்திய காலங்களிலும் நார்த்தாமலை, பண்பாடு செழித்திருந்த, முதிர்ச்சியடைந்த நாகரீகம் நிலவிய பகுதியாக இருந்திருக்கிறது. ஆனால் காலப்போக்கில் பொதுமக்களின் கவனம் பெறாத, ஒரு சில வரலாற்று ஆர்வலர்கள் தவிர ஏனையோர்களின் பார்வைக்கு வராமலேயே வரலாற்றின் மறைவுப் பகுதிக்கு நார்த்தாமலை சென்று விட்டது. நல்வாய்ப்பாக தற்பொழுது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

நார்த்தாமலையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் பழங்காலத்தில் வணிகப் பாதையில் இருந்திருக்கின்றன. குறிப்பாக பூம்புகாரில் இருந்து மதுரை மற்றும் கேரளக்கரை வரை செல்லும் பாதைகள் நார்த்தாமலையைத் தொட்டுச் சென்றிருக்கின்றன. கோவலன் கண்ணகியின் பயணமும் இந்தப் பாதையில் அமைந்திருக்க வாய்ப்புண்டு என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். வணிகப்பாதைகள் – “பெருவழிகள்” என்றும் அழைக்கப்பட்டன. பெருவழிகள் தமிழகத்தில் பல இருந்திருக்கின்றன. அவற்றில் இரண்டு வழிகளை மட்டும் இங்கு காணலாம். முதல் வழி கிழக்குக் கடற்கரையில் தொண்டியில் இருந்து பொன்னமராவதி, பேயால் (இலுப்பூர்) கொடும்பாளூர், கரூர், கொடுமணல் வழியாக மேற்குக் கடற்கரை செல்வது. மற்றொரு வழி கிழக்குக் கடற்கரையில் உள்ள மணல்மேல்குடி, பூம்புகார் ஆகிய துறைகளில் இருந்து காவிரி ஆற்றின் வடகரை வழியாக கொடும்பாளூர், நெடுங்குளம் வழியாக மதுரை செல்வது.

“கொடும்பை நெடும் குளக் கோட்டகம் புக்கால்” (சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், காடுகாண்காதை, வரி 71, முனைவர் கரு. முத்தையா, கலாசேத்திரா பப்ளிகேஷன்ஸ், கோவிலூர்) இவ்வரியில் குறிப்பிடப்படும் கொடும்பை என்பது கொடும்பாளூர் ஆகும். நெடும்குளம் என்ற நெடுங்குளம் மற்றும் கொடும்பாளூர் ஆகிய இரண்டு ஊர்களும் இன்றும் நார்த்தாமலை அருகில் உள்ள ஊர்களாகும்.

நார்த்தாமலை வணிகர்களுக்கு இன்றியமையாத இடமாக குறிப்பாக, நாட்டுக்கோட்டை நகரத்தார்களை

இத்தொடர் மையப்படுத்துவதால், நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு முகாமையான வரலாற்று, பண்பாட்டு மையமாக உள்ளது. நகரத்தார்களுடன் நார்த்தாமலைக்கு உள்ள தொடர்புகளை பலவகைகளிலும் சான்றுகளின் அடிப்படையில் நாம் காண இருக்கிறோம்.

வரலாற்றுச் சான்றுகள், நகரத்தார்களின் வாழ்வியல் சான்றுகள், ஆய்வாளர்களின் கருத்துகள் எனப் பலவாறாக, மிகைப்படுத்தப்படாத வகையில் அச்சான்றுகள் உள்ளன.

வணிகக்குடிகளின் முதல் பதிவு – நார்த்தாமலையில்:

பல்லவர்கள் ஆளுகையில் இருந்த நார்த்தாமலை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் சோழர்களின் ஆளுகைக்குக் கீழ் வருகிறது. இராசராச சோழன் ஆட்சியாண்டு 5-ல் கி.பி.990-ல் நார்த்தாமலையில் உள்ள கல்வெட்டு மூலம் நகரத்தார்கள் நார்த்தாமலையில் வாழ்ந்தது, எழுத்து வடிவில் பதிவாகி உள்ளது. கி.பி. 1450-ல் நகரத்தார்மலை என்ற குறிப்பினைக் கொண்ட கல்வெட்டிற்குப் பிறகு வேறு கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. நகரத்தார்கள் சோழர்கள் ஆட்சியில் மட்டும் 500 ஆண்டுகள் நார்த்தாமலையில் வாழ்ந்திருக்கிறார்கள். மேற்கண்ட காலத்திற்கு அதாவது கி.பி.1450-ஆம் ஆண்டிற்குப் பின்பு என்ன நடந்தது? விடை காண முடியுமா?

பழம்பெரும் நகரம் நார்த்தாமலை:

இந்தியா ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம் என்று வெளிநாட்டு ஆய்வாளர்கள் பலரும் சொல்லியுள்ளனர். இந்தியா முழுதும் விரவிக் கிடக்கும் தொல் எச்சங்களே அதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. அந்த வகையில் தொன்மையான சான்றுகள் கிடைக்கும் இடங்களில் தமிழகம் முன்னோடியாக இருக்கிறது. தமிழகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் நார்த்தாமலை இன்றியமையாத இடத்தில் உள்ளது. காரணம் பழமையான நகரமாக நார்த்தாமலை கருதப்படுவதுதான். தமிழகத்தில் நகர நாகரீகம் இருந்ததற்கான அடையாளங்கள் சிலவே இன்று காணக் கிடைக்கின்றன. காரணம் தொன்மையான இடங்கள் தொடர்ந்து மக்களின் வாழ்விடங்களாக இருந்து வந்துள்ளன. எனவே, தொன்மையான இடங்கள் அதன் பழமையைத் தக்க வைக்க இயலாமல் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளன. ஆனால் நார்த்தாமலை தொன்மையான இடமே. பழங்கால நகரான நார்த்தாமலை காலங்களைக் கடந்து தற்கால நகராக மலரவில்லை. எனவே புதிய மாற்றங்களைப் பெறவில்லை. ஆகையால்தான் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த பல கட்டுமானங்கள் இன்றும் அங்கு காணக் கிடைக்கின்றன.

நார்த்தாமலை பழங்கால நகர் என்பது தொல் ஆய்வாளர் திரு.ஆர். திருமலை அவர்களின் கருத்தாகும் (Thirumalai.R., Study in the History of Ancient Townships of Pudukkottai, Institute of Epigraphy, State Department of Archaeology, Government of Tamil Nadu, Madras -1981, First Edition)

நார்த்தாமலையைப் பண்டைய காலத்தின் கலை, பண்பாட்டு வளாகம் எனக் கொள்ளலாம். தமிழகத்தின் கலைப் பண்பாட்டைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தும் இடமாக உள்ளது. இங்குள்ள கோயில்களின் எண்ணிக்கையே நார்த்தாமலை ஒரு நகரம் என்ற கூற்றை மெய்ப்பிக்கும்.

நார்த்தாமலையில் இன்றும் நாம் காணும் வகையில் உள்ள கலைக் கூடங்கள், கட்டுமானங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. இக்கட்டுமானங்கள் ஏதேனும் ஒரு வகையிலாவது வணிகக் குடிகளோடு தொடர்புடையதாக இருக்கிறது.

1. மேலமலையில் பழியிலி ஈசுவரம் என்ற சிவன் குடவரைக் கோயில்.
2. 'தலைவர் சிங்கம்' என்ற நீர்சுனைக்குள் இருக்கும் குடவரைக் கோயில்.
3. 'பதினெண்பூமி விண்ணகரம்' என்ற திருமால் குடவரைக் கோயில்
4. விசயாலய சோழீசுவரம் என்ற முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டக் (கருங்கல் கட்டுமானக் கோயில் – கலசம் வரை) கோயில்.
5. ஆளுருட்டி மலை அடிவாரத்தில் உள்ள 'திருமலைக் கடம்பர்' கோயில்.
6. பிற்காலப் பாண்டியர் கலையில் கட்டப்பட்ட 'நகரீசுவரம்' என்ற சிவன் கோயில்.
7. ஊரின் மையப்பகுதியில் உள்ள 'திருவானைக்கா ஈசுவரம்' என்ற சிவன் கோயில்.
8. ஊரின் வடக்கே அமைந்துள்ள 'மாரியம்மன் கோயில்' ஆகியன ஆகும்.
9. 'கொடும்பாளூர் மூவர் கோயில்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் நார்த்தாமலைக்கு அண்மையில்தான் உள்ளது.

நார்த்தாமலையில் பதினெண்பூமி விண்ணகரம்:

மலை மீது உள்ள சிவன் கோயில் விஜயாலய சோழீச்சுரம் என்றழைக்கப்படுகிறது. விஜயாலயன் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்ட இக்கோயிலுக்கு எதிரில் உள்ள மலையில் ஒரு குடவரைக் கோயில் உள்ளது. இது 'பதினெண்பூமி விண்ணகரம்' என்றழைக்கப்படுகிறது. இந்த குடவரை முன்னர் 'சமணர் குடகு' என அழைக்கப் பட்டது. இதன் காலம் ஏழாம் நூற்றாண்டு ஆகும் .

புதுக்கோட்டை மாவட்டம் சமணர்கள் மிகுதியாக வாழ்ந்த பகுதியாகும். அதன் எச்சங்கள் இன்றும்

Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்துவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

காணக் கூடியவையாக இருக்கின்றன. சமணர்கள் வாழ்ந்த பகுதி நார்த்தாமலை என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. வணிகக்குடிகளும் சமணநெறியை தழுவி வாழ்ந்திருக்கின்றனர். பதினெண்பூமி என்பதும் ஒரு வணிகக் குழுவே. “நகரம் என்ற அமைப்பும், பதினெண்பூமி என்ற வணிகக் குழுவும் ஐநூற்றுவர் குழுவின் இணை அமைப்புகளே” (K.R.Venkatrama Ayyar, A manual of The Pudukkottai State, Volume 2, Part 2, 1944, reprinted Commissioner of Museums, 2002 Pg 1070) பதினெண்பூமி அமைப்பால் உருவானதே இந்த ‘பதினெண்பூமி விண்ணகரம்‘ என்ற குடவரை.

“திருமேற் கோவிலாக உகந்தருளப் பண்ணின பதினெண்பூமி விண்ணகர எம்பெருமானையும் பிராட்டியாரையும் உகந்தருளிப் பண்ணி” (பு.ச.க. 281) என்பது கல்வெட்டு வரியாகும்.

முன்னர் சமணர்களாக இருந்தவர்கள் பின்னர் வைணவர்களாகத் தங்களது சமய நெறியை மாற்றிக் கொண்டிருக்கலாம். எனவே இக்குடவரையும் பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது. குடவரைக்குள் வைணவச் சிற்பங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

நார்த்தாமலைக்கு அருகில் தொல்லியல் அகழாய்வுக்கு ஏற்ற பெருங்கற்கால இடம் உள்ளது. நகர நாகரீகம் வளர்ந்த இடமாக நார்த்தாமலை உள்ளது. இத்தனை சிறப்பு வாய்ந்த மதிப்பு மிக்க இந்தப் பகுதியில், உலகில் சிறந்த ‘கருங்கல்’ கிடைக்கிறது. இன்றைய நாளில் நார்த்தாமலைப் பகுதி முழுவதும் தோண்டப்பட்டு, பண்பாட்டின் தொட்டில் சீரழிக்கப்பட்டு வருகிறது என்ற அவலத்தை நம் தலைமுறையில் பார்க்கிறோம்.

நகரத்தார்கள் மட்டும்தானா?

நகரத்தார்கள் வாழ்ந்த, சான்றுகள் கிடைக்கும் இடங்களில் நார்த்தாமலை முன்வரிசையில் உள்ளது. நார்த்தாமலையும் அதனைச் சுற்றியள்ள பகுதிகளும் வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டவை. சிறப்புகள் பொருந்திய இப்பகுதியை விட்டகன்று, சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின் பல பகுதிகளில் வணிகச் சமூகங்கள் வாழ்ந்து வருகின்றன. இன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் வாழ்ந்து வரும் அந்தச் சமூகத்தினர் நகரத்தார்கள், செட்டியார்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

அவர்களில் சில சமூகத்தினர்

1. விராலூர்ச் செட்டியார்கள், 2. வல்லநாட்டு நகரத்தார்கள், 3. நம்புகுழிச் செட்டியார்கள், 4. சாதுச் செட்டியார்கள், 5. அருவியூர் நகரத்தார்கள், 6. நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் ஆகியோர் ஆவர்.

(வரலாறு வளரும்)

சித்திரா பௌர்ணமி திருவிழா

நாகை நகரத்தார்களால் நடத்தப்படும் சித்திரா பௌர்ணமி திருவிழா, 22.04.2024 அன்று நாகையில் இருந்து காவடி கட்டி, வேலுக்கு அபிஷேகம் செய்து மாடு பூட்டிய ரதத்தில் சுவாமி புறப்பட்டு, சுவாமியுடன் நகரத்தார்கள் ஆச்சிமார்கள், குழந்தைகள் பாதயாத்திரையாக எட்டுக்குடி சென்று 23.04.2024 அன்று எட்டுக்குடி நகர மடத்தில் வேலுக்கு அபிஷேகம், மகேஸ்வர பூஜை, மங்கல பொருள்கள் ஏலம், மாலை பாணக பூஜை நடைபெறும். 24.04.2024 தொட்டில், காவடி, பால்குடம் எடுத்து நகரத்தார்கள் எட்டுக்குடி கோவிலில் அபிஷேகம் ஆராதனை செய்து காவடி செலுத்துதல். மறுநாள் 25.04.2024 விடையாற்றி. மண்டபத்தில் விருந்தும், கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு மண்டபவாயிலில் அன்னதானமும் நடைபெறும்.

தகவல்: கயிலை மணி எஸ். அடைக்கப்ப செட்டியார்

கை மேல்மூட்டு அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் ராம். சிதம்பரம்

தோள்பட்டை, முழங்கை மணிக்கட்டு மற்றும் கையை பாதிக்கும் பிரச்சனைகள் உள்ள நோயாளிகளுக்கு பிரத்தியேகமாக வழங்கப்படும் சிறப்பு மையம், இந்தியாவில் முதன்முறையாக சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.

ஆழ்வார்பேட்டை TTK சாலையில் அமைந்துள்ள சென்னை தோள் (முழங்)கை மையம் (CHENNAI UPPER LIMB UNIT) மேல் மூட்டு பாதிக்கும் அனைத்து வகையான காயங்கள், விளையாட்டு காயங்கள் மற்றும் மூட்டு மாற்று சிகிச்சையை வழங்குகிறது.

மனிதனின் விளையாட்டு மற்றும் அன்றாட நடைமுறைகளை செயல்படுத்த கைகள் மிக பங்காற்றுகிறது. குறிப்பாக தோள்பட்டையில் அமைந்துள்ள பந்து போன்ற மூட்டு, கைகளை 360 டிகிரிக்கு சுழற்றவும், வேலைகளைச் செய்யவும் உதவுகிறது. அதேபோல் மணிக்கட்டு மற்றும் முழங்கையில் உள்ள எலும்புகளும் மிக முக்கியமானவை. இந்தியாவில் இடுப்பு மற்றும் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை குறித்து மக்களிடையே நன்கு விழிப்புணர்வு உள்ளது.

ஆனால், தோள்பட்டை மற்றும் முழங்கை சம்பந்தமான சிகிச்சை மற்றும் மாற்று அறுவை சிகிச்சை குறித்து பெரிய அளவில் விழிப்புணர்வு இல்லை. மருத்துவர்கள் மற்றும் பொது எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கூட தோள்பட்டை மாற்று அறுவை சிகிச்சையின் நன்மைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

தற்போது சென்னையில் பிரபல மருத்துவரான ராம் சிதம்பரம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சென்னை UPPER LIMB UNIT மருத்துவ மையத்தில், தோள்பட்டையின் எலும்பு, குருத்தெலும்பு அல்லது தசைகள் மோசமாக தேய்ந்து போனாலோ அல்லது கிழிந்தாலோ, உலகத்தரத்தில் அதிநவீன மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி, பாதித்த மூட்டுகளையே மாற்ற முடியும்.

இதுகுறித்து மருத்துவர் ராம் சிதம்பரம் கூறுகையில், “CHENNAI UPPER LIMB UNIT-ல் தோள்பட்டை, முழங்கை, மணிக்கட்டு, கை ஆகியவற்றின் மூட்டுகளுக்கு பிரத்யேக சிகிச்சை உலகத் தரத்தில் அளிக்கப்படுகிறது. தோள் பட்டை மூட்டுகளில் தேய்மானமோ, டிஸ்லோகேஷனோ ஏற்பட்டால் சிகிச்சை அளிக்கப்படுவது வழக்கமானது. ஆனால், எங்கள் மையத்தில் மோசமாக பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு தோள்பட்டை மாற்று அறுவை சிகிச்சை அதிநவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பம் என்னென்ன?

உலகிலேயே முதல் முறையாக தோள்பட்டை மாற்று அறுவை சிகிச்சையை, ஹோலோலென்ஸ் மற்றும் நேவிகேஷன் சாப்ட்வேரைப் பயன்படுத்தி மிக்ஸ்டு ரியாலிட்டியின் வழிகாட்டுதலுடன் செய்யப்பட்டிருக்கிறது. ஹோலோலென்ஸ் என்பது உயர் தொழில்நுட்ப கேமராக்கள், சென்சார்கள் மற்றும் ஹாலோகிராபிக் டிஸ்ப்ளே கொண்ட செயற்கை நுண்ணறிவால் (AI) இயக்கப்படும் ஹெட்செட் ஆகும்.

நோயாளிகள் மூட்டு தேய்மானத்துடன் அல்லது முந்தைய தோல்வியுற்ற அறுவை சிகிச்சைக்குப் பிறகு எங்களிடம் வருகிறார்கள். CT ஸ்கேன் எடுக்கப்பட்டு, எலும்பில் எந்த இடத்தில் செயற்கை மூட்டு பொருத்த வேண்டும் என்று செயற்கை நுண்ணறிவு மற்றும் மென்பொருள் உதவியுடன் திட்டமிடப்படுகிறது. அறுவை சிகிச்சை நிபுணர் ஹோலோலென்ஸ் சாதனத்தை அணிந்து, முன்னரே செய்த திட்டத்தை ஹாலோகிராம் ஆக பார்க்கிறார் இந்த வழிகாட்டுதலுடன், தோள்பட்டை மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

ஹோலோலென்ஸ், தோள்பட்டை மாற்றத்தில் அதிக துல்லியத்தை வழங்குகிறது. இந்த அதிநவீன சிகிச்சை எடுத்துக் கொண்ட நோயாளிகள், ஸ்லிங் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. உடனடியாக தோள்களை பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். இரண்டு வாரங்களுக்குள் அவை 90 டிகிரி முன்னோக்கி உயரத்தைப் பெறுகின்றன மற்றும் 3 மாதங்களில் முழு அளவிலான இயக்கத்தை அடைகின்றன.

யார் இந்த டாக்டர் ராம் சிதம்பரம்?

இந்தியாவிலும், இங்கிலாந்திலும் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள டாக்டர் ராம் சிதம்பரம், தற்சமயம், ஆசியாவின் சிறந்த தோள்பட்டை மற்றும் மேல் மூட்டு அறுவை

டயாலிசிஸ்: மருத்துவக் கருவிகள் வாங்க ரூ. 25 லட்சம் நன்கொடை

தேவகோட்டையைச் சேர்ந்தவர் திரு. மா.அரு. சேவுகன் செட்டி (நேமம் கோவில்) அவர்கள். இவர் கந்த சஷ்டி கழக முன்னாள் தலைவராக இருந்தவர் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் டயாலிசிஸ் சிகிச்சை அளிக்க அதற்கான கருவிகள் வாங்குவதற்காக ரூபாய் 25 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். காரைக்குடி பியர்ல்ஸ் சங்கமம் என்ற ரோட்டரி சங்கம் இந்த பணியை இணைந்து செய்ய உள்ளது . உலக ரோட்டரி சங்கத்திடம் இருந்து இதற்கு இணையான 25 லட்சம் ரூபாய் பெற்று 50 லட்சம் ரூபாய் செலவில் டயாலிசிஸ் சிகிச்சை மையம் தேவகோட்டையில் அமைய உள்ளது. டயாலிசிஸ் சிகிச்சை மையம் அமைவதற்கு குளிர்சாதன அறை, மருத்துவர், நர்ஸ் ஆகியோரின் சேவை தேவைப்படுவதால் புலியாளில் உள்ள கிறுத்துவ மருத்துவமனையோடு இணைந்து இதை செயல்படுத்த உள்ளனர். குறைவான சேவை கட்டணம் மட்டும் பெற்றுக் கொண்டு இங்கு டயாலிஸ் சிகிச்சை வழங்க திட்டமிட்டுள்ளனர். இப்பணிக்கு தானாக முன்வந்து 25 லட்ச ரூபாய் வழங்கிய மா.அரு. சேவுகன் செட்டி அவர்களை நமது செட்டிநாடு வாசகர்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

தகவல்: தமிழ்ச்செம்மல் சே. குமரப்பன்

சிகிச்சை நிபுணர்களில் ஒருவராக கருதப்படுகிறார். தோள்பட்டை, முழங்கை, மணிக்கட்டு மற்றும் கையை பாதிக்கும் 4,500 கீஹோல் அறுவை சிகிச்சைகள், 1,100 மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் 3,000 எலும்பு முறிவு அறுவை சிகிச்சைகள் செய்துள்ளார். அவர் 2017 முதல் 2021 வரை தொடர்ந்து 4 ஆண்டுகள் இந்தியாவின் ஷோல்டர் அண்ட் எல்போ சொசைட்டியின் தலைவராக பணியாற்றினார். தமிழ்நாடு ஆர்த்ரோஸ்கோபி சொசைட்டியின் தற்போதைய செயலாளராகவும், ஆசிய தோள்பட்டை மற்றும் முழங்கை சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினராகவும் உள்ளார். அவர் பிரிட்டிஷ் தோள்பட்டை மற்றும் முழங்கை சங்கம் (BESS) மற்றும் எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்களின் அமெரிக்க சங்கம் (AAOS) ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவும் உள்ளார்.

அவருக்கு முழு தோள்பட்டை மூட்டு மாற்று அறுவை சிகிச்சையில் ஆர்வம் உள்ளது. இது இந்தியாவில் இன்னும் புதிதாக உள்ளது. அவர் இங்கிலாந்தில் இருந்து வந்தவுடனே, தென்னிந்தியாவில் 2011-ல் முதல் தோள்பட்டை மூட்டு மாற்று அறுவை சிகிச்சையை செய்தார். அதன் பிறகு 2012-ல் முதல் ஸ்டெம்லெஸ் தோள்பட்டை அறுவை சிகிச்சையை செய்தார். தோள்பட்டை மாற்று அறுவை சிகிச்சையை நன்கு அறிந்தவர் டாக்டர் ராம். சிதம்பரம்.

இந்த மூட்டு மாற்றுச் சிகிச்சைக்கு உறுப்புதானம் தேவையில்லை. சிகிச்சைக்குத் தேவையான Prostinesis என்ற பொருள் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் சிகிச்சைக்கு குறைந்த பட்சம் ரூ. 2 லட்சம் செலவாகும். நல்ல மருத்துவ காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் சிகிச்சை பெற இயலும் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல கால் மற்றும் கணுக்கால் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் கார்த்திக். ஹரிஹரனின் தாயார் டாக்டர் சரோஜினி ஹரிஹரனுக்கு மே 2023-இல் முதன் முதலாக இந்த அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. அதன்பிறகு, சென்னையில் 8-க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகளை செய்துள்ளார்.

என்னென்ன சிகிச்சைகள் வழங்கப்படும்?

1. இந்த மையம் 30 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதேச அனுபவத்துடன் உலகத் தரம் வாய்ந்த அர்ப்பணிப்புள்ள தோள்பட்டை மற்றும் மேல் மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர்களால் வழங்கப்படும் பிரத்யேக தோள்பட்டை முழங்கை மணிக்கட்டு மற்றும் கை மூட்டு பராமரிப்பை வழங்குகிறது.
2. தோள்பட்டை மாற்று சிகிச்சையில், 3D திட்டமிடல், ஹோலோலென்ஸ் மற்றும் Mixed ரியாலிட்டி நேவிகேஷன் ஆகியவற்றின் மூலம் துல்லியத்தை மேம்படுத்த புதிய தொழில்நுட்பத்தை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். இது உங்கள் மூட்டை வாழ்நாள் முழுவதும் வலியின்றி இயங்கச் செய்யும். ♦

கருணை

(படிக்கதில் பிடிக்கது)

ALS நாச்சியப்பன்

'புத்தன் மறைந்து விட்டான். அவன் போதனை மறைந்ததுண்டா?' என்று ஒரு பாடலில் கவியரசு கண்ணதாசன் எழுதியிருந்தார்.

பேரரசின் ஒரே வாரிசு நாட்டை ஆளும் மன்னனின் மகன் சித்தார்த்தன். எல்லாவிதமான சுகங்களையும் அனுபவித்து அரண்மனையில் வாழ்ந்தவன். ஒரு நாள் வாழ்க்கை என்பது வெறும் இந்த சுகங்கள் மட்டுமா? வாழ்க்கை எதை நோக்கி நகர்கிறது. எதை அடைகிறது என்பதை அறிய விரும்பினான். விளைவு ஒரு இரவு அவன் மனைவி, தந்தை, அரண்மனையில் வாழ்வோர் என்று யாரிடமும் சொல்லாமல் சுக போக வாழ்க்கை எல்லாவற்றையும் துறந்து வனம் நோக்கிச் செல்கிறான். பன்னிரண்டு ஆண்டுகள் கடக்கின்றன. ஞானம் பெற்ற புத்தனாக மாறி மீண்டும் அரண்மனைக்கு வருகிறான். அங்கு என்ன நடந்தது?

ஓஷோ சொற்பொழிவாற்றியதை சுவாமி சியாமனந்த் தொகுத்து 'ஓம் சாந்தி சாந்தி சாந்தி' என்ற புத்தக வடிவில் கொடுத்துள்ளார். கவிதா பப்ளிகேஷன் வெளியீடு, இனி ஓஷோவின் வரிகளில்...

அன்பு என்பது எப்படி இருக்கும்?

அன்பு என்பது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அது வெறும் காமமாக இல்லாமல், ஒரு ஆன்மிக இணக்கமாக இருக்கும் போது, நிச்சயமாக இந்த பாசம் என்பது கருணையைக் கொண்டு வந்து விடும். மேலும் இப்படி பாசம் உங்களது வாழ்வில் கருணையாக இரக்கமாக உருமாற்றம் அடைவது தான் இந்த மனிதனின் முழு பரிணாம வளர்ச்சியில் ஒருவன் கௌதம புத்தராக உருமாறுவது ஆகிவிடுகிறது. இது அபூர்வமாகத் தான் நிகழ்கிறது.

புத்தர் இந்த உலகினை, அவரது சாம்ராஜ்யத்தை, அவரது அரண்மனையை தான் மிகவும் நேசித்ததாக எண்ணிக்கொண்டிருந்த அவரது மனைவியைக் கூட துறந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து அவர் திரும்பி வந்தார். அப்போது அவர் மெய்ஞானம் பெற்று விட்ட படியால் அவர் தனது வயதான தந்தையிடத்திலும், அவரது பாசம் மிக்க மனைவியிடத்திலும், பிறந்து ஒரு நாளே ஆன அவர் குழந்தையிடத்திலும் அவர் மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ள வில்லை என்பதை உணர்ந்தார். எனவே அவர் மெய்யறிவு பெற்ற உடன் அவர் செய்த முதல் காரியம் அவர் பழைய சாம்ராஜ்யத்துக்கு திரும்பவும் வந்து அவர்களிடம் மன்னிப்புக் கேட்டது தான்.

இதற்கு ஒரு அழகான கதை உண்டு.

கௌதம புத்தர், ஆனந்தா என்னும் தனது ஒன்று விட்ட சகோதரனுக்கு சந்நியாசி தீட்சை வழங்கிய தருணத்தில் ஆனந்தா அவரிடம் இந்த தீட்சைக்குப் பிறகு 'நான்' என்பவன் இனிமேல் கிடையாது. உங்களது வார்த்தை தான் எனது வாழ்க்கை. உங்களது கட்டளை தான் எனது வழி என்று கூறினார். இந்த ஆனந்தா புத்தரை விட வயதில் மூத்தவர். தீட்சை பெறுவதற்கு முன்பு நான் உங்கள் மூத்த சகோதரர், எனவே நான் உங்களிடம் மூன்று நிபந்தனைகளை நிறைவேற்றித்தர வாக்குறுதி அளிக்க வேண்டும். ஏனெனில் இதற்குப் பிறகு நான் உங்களிடம் எதையும் கேட்க முடியாது. நீங்கள் எனது குருவாக ஆகிவிடுவீர்கள்.

புத்தர் 'அந்த மூன்று விஷயங்கள் என்ன? என்னிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. இந்த பிச்சைப் பாத்திரம் மட்டுமே உள்ளது' என்றார்.

ஆனந்தா, நான் உங்களிடம் பொருட்கள் எதையும் வேண்டவில்லை. வேறு சில விஷயங்களை கேட்கிறேன். முதலாவது நிபந்தனை 'உங்களது வார்த்தைகளை, உங்களது போதனைகளை பரப்புவதற்கு என்னை உங்களிடமிருந்து பிரித்து வேறு எங்காவது ஒரு போதும் அனுப்பக் கூடாது'. இரண்டாவது 'நாள் முழுதும் உங்களுடனேயே இருப்பேன். நீங்கள் இரவில் படுத்து தூங்கும் அறையில் தான் நானும் தூங்குவேன்'. மூன்றாவது 'நான் ஏதாவது கேள்வி கேட்டாலோ அல்லது உங்களிடம் கேள்வி கேட்க வேண்டும் என்று விரும்புகிற யாரையாவது அழைத்துக் கொண்டு வந்தால் நீங்கள் மறுக்கக் கூடாது. அதற்கு பதில் சொல்ல வேண்டும்'.

புத்தர் 'அதில் பிரச்சனை கிடையாது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீ திட்சை பெற்றுக்கொள்'.

ஆனால் அது பிரச்சனைகளை பின்னர் உருவாக்கப் போகிறது என்பதை புத்தர் உணரவில்லை. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவர் அரண்மனைக்குத் திரும்பி வந்த பிறகு ஒரு பிரச்சனை நடந்தது. ஆனந்தா புத்தரின் நிழல் போலவே உடன் இருந்தார்.

புத்தர் ஆனந்தாவிடம் 'நான் எங்கு போனாலும் என்னோடு இருப்பதற்கு உனக்கு உரிமை உண்டு என்பதை நான் அறிவேன். ஆனால் உன்னால் புரிந்து கொள்ள முடியும், உனக்கு அந்த அளவுக்கு புத்திக் கூர்மை உண்டு. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் நேசித்த அதே பெண்மணி, நான் போகிறேன் என்று கூட அவளிடம் சொல்லாமல் அவளை

ஆறாவயலில் இலக்கிய உலா

ஆறாவயல் சண்முகநாதபுரம் நகரத்தார் தர்ம பரியாலன சபையின் மூன்றாம் ஆண்டு ‘ மாசி உற்சவம்! ‘(மாசி இலக்கிய உலா!) ‘பெண்ணின் பெருமை!’ என்ற பொதுத் தலைப்பில் மாசி முதல் தேதி தொடங்கி ஆறாம் தேதி வரை சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் (13-02-24) ‘பாஞ்சாலியின் பெருமைகளை’ நல்லாசிரியர் திருக்குறள் தேனீ மெ.ஜெயங்கொண்டான் அவர்களும், இரண்டாம் நாள் ‘மாதவியின்!’ பெருமைகளை, கவிஞர் பா. தென்றல் அவர்களும், மூன்றாம் நாள் ‘மணிமேகலை’ பெருமைகளை, காரைக்குடி கம்பன் கழகச் செயலாளர் முனைவர் மு. பழனியப்பன் அவர்களும், நான்காம் நாள், தமயந்தி பெருமைகள் குறித்து முனைவர் தேனப்பன் அவர்களும், ஐந்தாம் நாள், ‘மைதிலியின்’ (சீதை) பெருமைகளை வாழ்வியல் திறன் பயிற்சியாளர் சொ.வினைதீர்த்தான் அவர்களும், உற்சவ நிறைவு நாளான ஆறாம் நாள், (18-02-24) கண்ணகியின் பெருமைகளைப் பற்றியும் முனைவர் பாகை கண்ணதாசன் அவர்களும் உரையாற்றினார்கள். சிவனடியார் சேவு.பழ.இராமசாமி செட்டியார் (PL.R)நிகழ்வை தொகுத்துரைத்தார். பரிபாலன சபையின் தலைவர் ஆங்கிலக் கவி இராம. சண்முகம் செட்டியார் அவர்கள் நிகழ்ச்சிகளுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். – ஆறாவயல் பெரியய்யா

விட்டு போய்விட்டேன். எனவே அவள் நிச்சயம் என் மீது கோபத்தில் இருக்க வேண்டும். அவளும் மற்றொரு அரச குடும்பத்தை சேர்ந்தவள் தான். நீ இப்போது என்னுடன் இருந்தால் உன் முன்பாக அவள் தனது கோபத்தைக் காட்ட மாட்டாள். ஏனெனில் அது மரியாதைப் பண்புக்கு எதிரானது ஆகிவிடும். ஆனால் நான் அவள் கோபம் என்னும் சுமையை முழுவதுமாக இறக்கி வைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அது இப்போது உன்னிடம் தான் உள்ளது. எனவே நீ கொஞ்சம் பின்னால் அரண்மனையின் கதவுக்கு பின் நிற்க முடியுமா?’ என்று கேட்டார்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. ஆனந்தா அந்த சூழ்நிலையைப் புரிந்து கொண்டு புத்தரை தனியே போக அனுமதித்தார். புத்தர் கூறியது சரிதான். அவரது மனைவி மிகவும் கோபப்பட்டார். அவள் புத்தரிடம் ’நீங்கள் இந்த உலகத்தை துறந்து விட்டதற்காக நான் கோபம் கொள்ளவில்லை. இப்படி துறவறம் வேண்டும் என்று சொல்லியிருந்தால் நான் உங்களை ஒரு போதும் தடுத்து நிறுத்தி இருக்க மாட்டேன். ஆனால் நீங்கள் என்னை நம்பவில்லை. அதற்காகத் தான் கோபப்படுகிறேன். நீங்கள் ஒரு சிறு வார்த்தை கூட சொல்லவில்லை. நடு இரவில் தப்பிச் சென்று விட்டீர்கள். அது என்னை தொடர்ந்து காயப்படுத்திக் கொண்டே இருந்தது. நீங்கள் சத்திய குலத்தைச் சேர்ந்தவர் என்பது போல் நானும் ஒரு வீரனின் மகள் தான். நாங்கள் எங்களது கணவன்மார்கள் போருக்குச் செல்லும் போது பிரார்த்தனை நடத்தி, மாலை அணிவித்து, அவர்களின் காலைத் தொட்டு வணங்கி, எங்கள் கண்களில் துளி கூட கண்ணீர் கசியாமல் பார்த்துக் கொள்வோம். ஏனெனில் கண்ணீர் அவர்களைத் தடுத்துவிடும். அவர்கள் வாழ்க்கை முறைக்கு அது அழிவைத் தேடித் தந்துவிடும். எனவே நீங்கள் சத்தியத்தைத் தேடுவதற்கு இந்த உலகினைத் துறந்து செல்லப் போகிறேன் என்று சொல்லியிருந்தால் நான் மிகவும் மரியாதை அடைந்திருப்பேன். ஆனால் நீங்கள் என்னை அவமதித்து விட்டீர்கள். என் மரியாதையை அழித்து விட்டீர்கள். என் கோபம் நீங்கள் விட்டுச் சென்றதற்காக அல்ல. என் கோபமே என்னிடம் ஏன் சொல்லிவிட்டுச் செல்லவில்லை என்பது தான்’. இதைப் பற்றி புத்தரும் ஒரு போதும் சிந்தித்துப் பார்த்தது இல்லை. அவர் மனைவியிடம் சொல்லாமல் சென்றது தான் கோபத்திற்கு காரணமாக இருக்கும் என்று நினைக்கவில்லை.

மேலும் அவர் மனைவி ’நீங்கள் என்னைப் போதுமான அளவு நேசித்து இருந்தால், நீங்கள் என் மீது திடமான நம்பிக்கை கொண்டிருப்பீர்கள். உங்களது தேடுதலில் நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்று எனது உள்ளம் நிறைந்த பிரார்த்தனைகளுடன் நான் உங்களை வழி அனுப்பியிருப்பேன். ஆனால் நீங்கள் அந்த சந்தர்ப்பத்தை எனக்கு கொடுக்கவில்லையே’ என்றார்.

புத்தர் நீ கூறுவது சரி தான். உன்னிடம் மன்னிப்பு கேட்பதற்காகத் தான் இப்போது வந்து இருக்கிறேன். என்னை மன்னித்து விடு’ நான் அன்பு என்று எதை நினைத்து இருந்தேனோ அது அன்பு இல்லை. இப்போது அன்பு என்றால் என்ன என்று அறிந்து கொண்டேன். இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளாக, இரவும் பகலும், உனது தனிமையில் நீ சேர்த்து வைத்திருக்கும் கோபத்தின் சுமையை இறக்கி வைக்கும் வரை நான் காத்திருக்கிறேன்’ என்றார். கௌதம புத்தரை அவரது மனைவி அவளது கண்களில் கண்ணீர் மல்க பார்த்தாள். ஏனெனில் தன்னை விட்டுச் சென்ற அதே மனிதர் தற்போது தன் முன்னால் இல்லை என்பதை அவளால் கண்டு கொள்ள முடிந்தது. பார்ப்பதற்கு அவர் அப்படியே தான் இருந்தார். ஆனால் எல்லாமுமே மாறியிருந்தது. அந்த அளவுக்கு அமைதியும் பிரசன்னமும் அவரது கண்கள் முழுவதும் மிகுந்த கருணையும் நிறைந்து இருந்தது.

அவள் புத்தரிடம் ’என்னால் உங்கள் மனைவியாகத்தான் இருக்க முடியவில்லை. குறைந்த பட்சம் என்னை உங்களது சிஷ்யையாகவாவது ஏற்றுக் கொள்ளக் கூடாதா என்று நான் தீட்சை பெறுவதற்கு முன் உங்களிடம் கேட்கிறேன்.

உங்கள் மகன் பனிரண்டு ஆண்டுகளாக காத்துக் கொண்டு இருக்கிறான். நான் அவனிடம் கொஞ்சம் காத்திரு, என்றாவது ஒரு நாள் அவர் வருவார் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இப்போது நீங்களும் வந்து விட்டீர்கள். ஆனால் மிகப் பெரிய உருமாற்றம் அடைந்து வந்திருக்கிறீர்கள். உங்கள் உயிர்த்தன்மை அந்த அளவுக்கு மிகுந்த பிரகாசமாக இருக்கிறது' என்றார். அவளது அருகிலேயே நின்று கொண்டிருந்த தனது மகனை இழுத்து புத்தரின் முன்பாக நிறுத்தி 'உனது தந்தையிடம் உனது பாரம்பரியத்தைக் கேள். அவர் உன்னைப் பெற்றார். அவர் நிறைவேற்ற வேண்டியது ஏதும் இன்னும் உள்ளதா, உனக்கு உண்டான பொறுப்புகள் ஏதும் அவரிடம் உள்ளதா? என்று கேள் என்றார்.

அவரது மகன் கௌதம புத்தரிடம் கேட்டான். அதற்கு புத்தர் 'உனது பாரம்பரியத்தை நான் வைத்திருக்கிறேன்' என்று கூறிவிட்டு அவர் தன்னிடம் வைத்திருந்த பிச்சைப் பாத்திரத்தை அவனிடம் கொடுத்து விட்டு, அவனுக்கு சன்யாச தீட்சை வழங்கினார். மேலும் அவனிடம் அவர் 'இதை விட மதிப்பு மிக்கது எதுவும் கிடையாது. இந்தத் தருணத்திற்காகத் தான் நான் காத்துக் கொண்டிருந்தேன். உன் மீது உண்மையிலேயே அன்பு செலுத்துகின்ற இந்த நொடிப் பொழுதிற்காகத்தான் காத்திருந்தேன். ஆனால் இப்போது நான் உங்களிடம் காட்டும் அன்பானது மக்கள் பேசிக்கொள்கின்ற அந்த அன்பைவிட வெகு தொலைவில் உள்ள ஒன்றாகும். என்னால் அந்த வார்த்தையை பயன்படுத்த முடியாது. எனவே இப்போது 'கருணை' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன். உங்கள் இருவரையும் நான் எனது கருணைக்குள் எடுத்துச் செல்கிறேன். உங்களுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை. ஆனால் உங்களுக்கு எனது உள்ளத்தையும், அனுபவத்தையும் கொடுக்கிறேன் என்று கூறினார். நாம் அன்பு என்று இப்போது அழைப்பது அன்பு அல்ல. மேலும் இந்த அன்பானது மறையும் போது மட்டுமே அதற்கான பரிசோதனை வருகிறது. மனிதன் வெறுமனே காமம் நிறைந்த அதாவது ஒரு உடல், உயிரியல் கவர்ச்சியில் தான் இருக்கிறான். அவன் ஒருபோதும் அந்த அன்பிற்கு ஏஜமானனாக இருந்தது கிடையாது அவன் ஓர் அடிமையாகத்தான் இருக்கிறான். அவன் உடலில் குருட்டு சக்திகளால் இயக்கப்படுகின்ற ஒரு அடிமையாக இருக்கிறான், நிச்சயமாக அது போன்ற காமம் ஒரு போதும் கருணையாக மாறாது. அன்பானது கருணையாக வளர வேண்டும் என்று விரும்பினால் அது உண்மையான அன்பாக இருக்க வேண்டும். மஞ்சள் வண்ண மலர்களின் விதைகளை விதைத்து விட்டு அங்கே ரோஜா மலரும் என்று நம்பிக் கொண்டிருக்கக்கூடாது. விதைக்குள் என்ன மறைந்து இருந்தது என்பதை மலர்கள் காட்டிவிடும்.

குறிப்பு:-

நாம் அறிந்து கொள்ள வேண்டிய கருத்து என்ன? இதைப் படித்த பிறகு புத்தர் போல் துறவியாகி, மனைவி மக்களையும் துறவறம் ஏற்கச் சொல்ல வேண்டுமா என்ற கருத்தை நினைக்கக் கூடாது. அவர் போல் ஞானம் பெற பல கோடி மக்களில் ஒருவருக்கு அந்த வாய்ப்பு கிடைக்குமா என்பது கூட சந்தேகம் தான். நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய பார்வை;- ஆசையே துன்பத்திற்கு காரணம் என்றார் புத்தர். அவர் வாழ்ந்தது ஞான வாழ்க்கை. அவர் நமக்கு உரைத்த போதனைகள் போலவே அவர் வாழ்க்கை கூட ஒரு போதனை தான். இராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி என்று சொல்வது உண்டு. அது போல் இல்லறம் என்பது வெறும் உடல் சுகம் மட்டுமல்ல. புத்தரிடம் பணம், செல்வம், சொத்து, உடல் உறவு, குடும்ப சுகம், அரண்மனை வசதிகள் என்று எதையுமே அவர் மனைவி எதிர்பார்க்க வில்லை. அவள் எதிர்பார்த்தது எல்லாம் அன்பு, அன்பு என்ற கருணை ஒன்றை மட்டுமே. உண்மையான அன்பு இருந்தால், பிரிவு என்பது நிரந்தரம் அல்ல. இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவருக்கு ஒருவர் குறைகாணாது விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக வாழமுடியும். இல்லறமோ துறவறமோ எதுவாக இருந்தாலும் அதுவே சொர்க்கமாக அமையும். மனித வாழ்க்கையில் மரணம் மட்டுமே கணவன் மனைவியை நிரந்தரமாக பிரிக்க வேண்டும். ஆனால் மனவேறுபாடுகளினால் எந்தச் சூழ்நிலையிலும் கணவன் மனைவி நிரந்தரமாக பிரிந்து வாழ்தல் கூடாது என்பதே நாம் அறிந்து கொள்ள வேண்டிய கருத்து. ■

பெரி.முத்துராமன்

மந்திரம் -15

உயிரை உடல் என்னும் வீட்டில் தங்க வைக்கத் தரும் வாடகை உணவு என பார்த்தோம். அதிலும் சாத்வீக உணவு மேலானது என்றும் பார்த்தோம். உடலை வளர்க்க நல்ல உணவும், உடற்பயிற்சிகளும் அவசியமாகின்றன என்றும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக சில சிந்தனைகள்.

உடல் என்னும் வீட்டில் குடியிருக்கும் உயிரை உன்னதமாக்குவது உணர்வுகளே ஆகும்.

இந்த உணர்வுகள் உருவாகும் இடம் மனமே. மன உணர்வுகளை மேலாக்குவது தியானம்.

மன உணர்வுகளால், புற மனதை அகத்தின் உள் செலுத்தி இறை உணர்வு பெறலாம். உள்ளத்தில் இறைவனைத் தேடலாம். தேடினால், அவன் அங்கு இருப்பதைக் காணலாம்.

எந்த நிபந்தனைக்கும் எந்த காலத்திற்கும் உட்படாத அன்பை உணர்தலே இறைவன் உள்ளிருப்பதை உணருதல் ஆகும்.

அத்தகைய அன்பு, எல்லா உயிர்களையும் உறவாகக் கருதும் ஒரு மனநிலையைத் தருகிறது.

மனமும் ஆன்மாவும் தொடர்புடையன. ஆனால் அதே சமயத்தில் வித்தியாசமானவையும் கூட.

ஆன்மா என்பது சமுத்திரம். மனம் கடலில் எழும் அலை போல. ஆன்மா இல்லையேல் மனம் இல்லை. ஆன்மா, மனம் இல்லாமலும் இருக்கலாம். இது ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் கருத்து.

மனம் என்பது எண்ணங்களே. நம்முடைய நினைப்புதான் மனம்.

வேதாத்திரியம் சொல்வதைப் போல், உயிருக்கு நாம் உடலளவில் எல்லை கட்டி விட்டோம். உண்மையில் மனமானது எல்லை இல்லாமல் விரிய வேண்டும். மனதின் சக்தியை நாம் உணர வேண்டும்.

தினசரி தியான பயிற்சிகளின் மூலம் உணர்வுகளைப் பெறக்கூடிய தனித்த மனம் என்கின்ற நிலையில் நிலைத்து நிற்க பழக வேண்டும். மனம் ஜீவகாந்த அலையாக இயங்குகின்றது. நம் உடலிலும் உடல் நலம் குறைந்த இடத்தில், மனதை செலுத்துவதன் மூலம் உடல் நலக்குறைபாட்டையும் சரி செய்யலாம்.

மனதை ஒரு நிலைப்படுத்துதல் தியானம் அல்ல. அது தாரணை. தியானம் என்பது மனதை நிலைப்படுத்தாது இருத்தல்.

தியானம் என்பது குளியலை போன்றது. தியானம் மனதை சுத்தம் செய்கிறது. தியானம் மனதை அமைதிப் படுத்துகின்றது. தியானம் மனதை பந்தங்களில் இருந்து விடுவிக்கின்றது. புனிதமான மனதிற்கு தியானம் தேவையில்லை.

(வளரும்)

திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.
ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.
VALATHI Since 2005
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு ரூ.1,00,000/- முதல் ரூ.25,00,000/- வரை
அதிகபட்ச உச்ச வரம்பு 25% முதல் 40% வரை
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
துவக்கம் 2005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம், 5வது கிராஸ் தில்லைநகர் மெயின் ரோடு, MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018. Cell : 94439 86143
9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட், G-1, தரைத்தளம், லோகையா தெரு, சாலிகிராமம், சென்னை - 600 093. Cell : 91235 71029
50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்) மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064
0431-2760064,80 3569950,7968005. 94439 86143 ★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com valathichitfunds.com

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன்

போடுங்கம்மா ஓட்டு

அரியக்குடி " ஸ்ரீ" - சபாரத்தினம்
(garudasaba@gmail.com)

இந்தியத்திருநாடு18-ஆவதுமக்களவைத்தேர்தலைச் சந்திக்க இருக்கிறது. 144 கோடி மக்கள் தொகையில், சுமார் 96.88 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க புதிய நாடாளுமன்றம் அமையவிருக்கிறது. இது சென்ற 2019 மக்களவைத் தேர்தலின் வாக்காளர்களிலிருந்து 6% அதிகம். ஆனால் இதே அளவு வாக்குப்பதிவு அதிகரிக்குமா?

மக்களவைத் தேர்தலில் அதிக பட்ச வாக்காளர்கள் வாக்களித்த தேர்தல் 2019-ல் நடந்த தேர்தல் தான். வாக்குப் பதிவு 67.40%. வாக்களிக்காதவர்களில் பெரும் பான்மையினர் படித்தவர்கள், நகரங்களில் வசிப்பவர்கள், இளைஞர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் என தேர்தல் ஆணையம் தெரிவிக்கிறது. ஆணையத்தின் அலசலை, அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. எழுத்தறிவு அதிகம் பெற்ற கேரள மாநிலத்தில் அதே தேர்தலில் 77.6% எழுத்தறிவு விகிதம் குறைவாக உள்ள பீகாரில் 57.33% வாக்குப் பதிவாகி, தேர்தலும் வாக்களிப்பதும் ஒரு புரியாத புதிர் என அறிவிக்கிறது.

சற்றேறக்குறைய 21 சதவீதம் வாக்காளர்கள் 18 வயது முதல் 25 வயதுக்குள் உள்ள இளைய வயதினர். இந்த வட்டத்திற்குள் நிற்கும் வாக்காளர்கள் முழுமையாக வாக்களித்தால், ஒரு தொகுதியின் வெற்றி அவர்கள் கையிலிருக்கிறது என்று ஆய்வுகள் சொல்லுகின்றன.

பொது வெளிகளில், புதியதாக வாக்களிக்க தகுதியாகியுள்ள இளையவர்களைச் சந்தித்து, அரசியல் குறித்துப் பேசினால், அவர்கள் தரும் பதில்கள் வேடிக்கையாக இருக்கிறது. பெரும்பாலான புதிய வாக்களார்களுக்கு அரசியல் பற்றிய போதுமான தெளிவில்லை. அடிப்படையில், சுதந்திர தினத்திற்கும், குடியரசு தினத்திற்குமான வித்தியாசம் கூடத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் மக்களைவக்குப் பிரதி-நிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

தம்பி. இந்த மக்களவைத் தேர்தலில் புதிதாக வாக்களிக்ப் போகிறீர்கள். "உங்கள் வாக்கு யாருக்காக இருக்கும்? என்று கேட்டால் .... பதில் "எங்க ஏரியாவில யாரு பத்திரிகை கொடுத்தாலும் ஒரு அண்ணன் கவரோடு வந்து வாழ்த்துவாரு, அந்த நல்லவருக்குத்தான்...."

இன்னொரு தம்பி "சார், நான் ரொம்ப கிளியர். யாரு காசு கூடத் தாரங்களோ அவங்களுக்குத் தான்...." ஒரு பெண் "எங்கள் குடும்பம் பாரம்பரிய இந்தக் கட்சிக்குத் தான் ஓட்டுப் போடுவாங்கா.. யார் தேர்தல்ல நிக்கிறாங்கன்னு கூடப் பார்க்க மாட்டோம். இந்தியா சுதந்திரம் பெற்று 77 ஆண்டுகளாகியும் இதே நிலையில் இருந்தால் என்ன செய்வது.

பிள்ளைகளிடம், நீ என்னவாகப் போகிறாய் என்று கேள்வி கேட்டால், நான் அரசியல்வாதியாகப் போகிறேன் என யாரும் சொல்வதற்கு முன் வருவதில்லை. மேதகு குழந்தைகளின் குருகுலத் தெய்வம் "அப்துல் கலாம்" அவர்கள் இந்தக் கேள்வியை ஒரு மேடையில் எழுப்பிய பொழுது, நான் "அரசியல்வாதியாகப் போகிறேன்" என்று சொன்ன குழந்தையை வெகுவாகப் பாராட்டினார்.

இளைஞர்கள் அரசியலுக்கு ஏன் வருவதில்லை என ஒரு கருத்துக்கணிப்பு நடத்தினால், பெரும்பாலனவர்களின் பதில் "அரசியல் ஊழல் நிறைந்தது" என்பதே. ஊழல் அரசியலில் மட்டும்தான் மலிந்திருக்கிறதா அரசு நிர்வாகத்திலும் கணிசமாக உள்ளதே? பின்னர் ஏன் அரசு அலுவலகங்களில் பணிபுரிய படித்த இளைஞர்கள் வரிசைகட்டிக் கொண்டு முயற்சிக்கிறார்கள். இது முரண் இல்லையா?

அரசியல், அடிப்படையில் சக மனிதர்களின் மீதான கரிசனத்திலிருந்து தொடங்குகிறது. உண்மையான அன்பும் சமத்துவமுமே அரசியல். போராட்டமே அதைச் சாதிக்கும் வழி. அதற்கான பாடமாக, நீ காண விரும்பும் மாற்றத்தை முதலில் உன்னிடமிருந்து தொடங்கு என்கிறது காந்தீயம்.

அரசியலில் வேட்பாளர்களின் செலவினங்கள் எப்படியிருக்கிறது. தேர்தல் ஆணையம் ஒரு மக்களவை உறுப்பினர் தேர்தலைச் சந்திக்க அனுமதிக்கும் செலவு தொகையை 70 லட்சத்திலுருந்து 95 லட்சங்களாக சமீபத்தில் உயர்த்தி இருக்கிறது. இது மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், மஹாராஷ்டிரா போன்ற பெரிய மாநிலங்களுக்கு. மற்ற மாநிலங்களுக்கு 54-லிருந்து 75 லட்சங்கள்.

ஒரு மக்களவைத் தொகுதிக்கு தோராயமாக 2000 வாக்குச் சாவடிகள் இருக்கின்றன. ஒரு வாக்கு சாவடிக்கு குறைவாக 10 முகவர்களாவது தேர்தல் பணி செய்ய வேண்டும். இந்தப் பணி மிகக் குறைவாக திட்டமிட்டாலும் 30 நாட்களுக்கு நடைபெறும். குறைந்த பட்ச ஊதியமாக ஒரு முகவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.750/- வீதம் என்று வைத்துக் கொண்டால், ஊதியம் மட்டுமே எத்தனை கோடிகளில் முடிகிறது என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். இது தவிர, பல இடங்களில் எண்ணற்ற

பொதுக் கூட்டங்கள் நடத்துதல், விளம்பரங்கள், உணவு ஏற்பாடுகள் இத்தியாதிகள் எனக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எத்தனை கோடிகள் வேண்டியிருக்கும். அனைத்து அரசியல் கட்சிகளும் சென்ற 2019 மக்களவைத் தேர்தலில் செய்த செலவு ரூ.55,000 கோடி என ஒரு புள்ளிவிபரம் சொல்லுகிறது.

இந்த நிலையில், நேர்மையையும் ஒழுக்க நெறிமுறைகளையும் பொது மக்களுக்கு சேவை செய்வதையே தன் அரசியல் சித்தாந்தமாகவும் கொண்டுள்ள ஒரு சாதாரணக் குடிமகன், மக்களவைத் தேர்தலில் வேட்பாளராக நுழைவதற்காவது வாய்ப்பிருக் கிறதா? மகாத்மாவே திரும்ப வந்தாலும் அவரது கொள்கைகளும், கோட்பாடுகளும் இன்றைய அரசியல் இயக்கங்களுக்கு இடையே நிற்க முடியுமா?

அதே நேரத்தில், இப்படி செலவுகளை எதிர்கொண்டு தேர்தலில் நின்று வெற்றி பெற்று, இந்தியத் திருநாட்டின் பல லட்சம் கோடிகளுக்கான பட்ஜெட்டை கையாளுகிற ஒரு பிரதமருக்கு மாதந்திர சம்பளம் ரூ 1.60 லட்சம் மட்டுமே. இதை நமது தெருவோரம் ஒரு பெட்டிக்கடை நடத்தும் நமது நண்பர்களே சம்பாதிப்பதைப் நாம் பார்க்கிறோம். இந்த அடிப்படையான அரசியல் அமைப்பில் உள்ள முரண் பல வழிகளில் ஆள்பவர்களைத் திசை திருப்புகிறது. உலகிலேயே ஊழல் குறைவானதாகச் சொல்லப்பெறும் நாடு சிங்கப்பூர், உலகிலேயே மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகச் சம்பளம் வழங்கும் நாடாகவும் இருக்கிறது. பிரச்சனைகளை மட்டுமே பேசாமல் அதற்கான ஆதாரத் தீர்வையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஊழல் அல்லது ஒழுங்கீனம் அரசியலில் மட்டுமே இல்லை. பொது மக்கள் பலர் அன்றாடம் அலையும் அரசு அலுவலங்களில், மருத்துவமனைகளில், கல்வி நிறுவனங்களில் என பல பரிணாமங்களில் வியாபித்து இருக்கிறது. ஆட்டோ ஓட்டும் நண்பரிடம் மீட்டருக்கு ஆட்டோ வருமா என்று கேட்டுப் பாருங்களேன்.

1947-ல் அடுத்தடுத்த நாட்களில் சுதந்திரம் பெற்ற தேசங்கள் இந்தியாவும், பாகிஸ்தானும். நமது நாட்டில், ஜனநாயகப் பூர்வமான தேர்தல் 1952-ல் நடந்தது. பாகிஸ்தானில் 1970-ல் தான் தேர்தல் முதலில் நடந்திருக்கிறது. நாம் இதுவரை பதிவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்த 10 அரசுகளை 2024 வரை பார்த்திருக்கிறோம். ஒரே ஒரு முறை மட்டுமே இது பாகிஸ்தானில் நிறைவேறியிருக்கிறது. ஜனநாயகத்தை கட்டமைத்ததில் நம் பின்புலம் பல தியாகங்களால் நிறைக்கப் பெற்றது.

அரசியலில் ஊழல் இருக்கிறது என்று தொடங்கி, அவர்களுக்கும் செலவு இருக்கிறது. இத்தனை லட்சம் கோடிகளை நிர்வகிக்கும் மக்கள் பிரதிநிதிக்கு கொடுக்கப்படும் ஊதியம் முரணாக இருக்கிறதே, எங்கு இல்லை ஊழல் என்று வந்து, நமது அரசியல் கட்டமைப்பு ஜனநாயகப் பின்னணியில் வலுவானது என்று தொடர்கிறீர்களே என்ன சொல்ல வருகிறீர்கள் என்னும் உங்களின் மனக் குரல் (mind voice) கேட்கிறது.

இதற்கெல்லாம் நாம் என்ன செய்ய முடிந்து விடும்? ஜனநாயகத்தை செழுமையாக்க உன்னதமான நோக்கங்களுக்காக, பல நூறு பேர்கள் இன்னும் தன்னலம் பாராது பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் யாரும் இன்றைய அரசியலின் அருகாமையில் இல்லை. அதற்கான அடிப்படை காரணம் “அச்சம்”. நம் மரபணுக்களில் அச்சம் செலுத்தும் ஆதிக்கம் மிக அதிகம். முக்கியமாக படித்தவர்கள் அச்சத்திற்கு ஆட்பட்டுக் கிடப்பதைக் காந்தியடிகள் பெரும் சாபமாகப் பார்த்தார். “வன்முறை வெறுக்கத்தக்கது. ஆனால் கோழைத்தனம் அதைவிட வெறுக்கத்தக்கது” என்றும் சேர்த்துச் சொல்லுகிறார் மகாத்மா.

இன்றைய நவீன இந்தியாவை ஆள இருக்கிற மக்களவைப் பிரதிநிதிகளுக்கான தேர்தலில் நம் புதிய வாக்காளர்களுக்கு, செய்தித் தாள்களை தினசரி வாசிக்கிற பழக்கத்தைச் சொல்லித் தரவேண்டும். உலக வரலாற்றில், ஒரு நாட்டின் விடுதலைக்குத் தலைமை வகித்து விட்டு, சுதந்திரமும் அதிகாரமும் கூடவரும் பொழுது, அதை உதறித் தள்ளிவிட்டு, அடுத்த போராட்டத்திற்குத் தயாரான காந்தியடிகளின் வாழ்வியலைச் தெரியச் செய்ய வேண்டும். பல ஆயிரம் கோடிகளைச் செலவு செய்து நடத்தும் தேர்தல்களில், தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதைப் புரிய வைக்க வேண்டும். என் ஒரு ஓட்டு என்ன செய்து விடும் எனும் புதிய வாக்காளர்களின் கேள்விகளுக்கு, ஒரே ஒரு ஓட்டில் தன் ஆட்சியை மேனாள் பிரதம மந்திரி வாஜ்பாய் இழந்திருக்கிறார் என்பதைச் சொல்லித் தரவேண்டும்,

வாக்களிப்பது மட்டும் ஜனநாயகக் கடமையில்லை. அன்றாடம் நம் வாழ்நாளில் பார்த்த மிக ஏழ்மையான, மிகப் பலவீனமான ஒரு மனிதரின் முகத்தை ஒரு முறை நம் அகக் கண் முன் நிறுத்தி, அந்த நபருக்கு ஏதாவது நாம் நன்மை செய்துவிட முடியுமா என்று யோசித்து அதைச் செய்யத் தொடங்குவோம்.

ஆயிரம் மைல் பயணம்

காலடி நிலத்திருந்து தொடங்குகிறது

(அண்மையில் அருஞ்சொல் புதிப்பக வெளியீடாக வந்த ஊடகவியலாளர் சமஸ் எழுதிய “அரசியல் பழகு” எனும் புத்தகம் வாசித்தேன். இன்றைய மாணவர்களுக்கு, ஒரு அரும்பெரும் அரசியல் பற்றிய ஞானக்களஞ்சியம் இந்தப் புத்தகம். புத்தகத்தின் தாக்கமே, இந்தக் கட்டுரையின் பெரும்பான்மை.)

நகரத்தார் சிகரத்தார் 100

காரைக்குடி நாராயணன்

இரவு நேரம். ஆச்சியின் கார் திருச்சியைக் கடக்கும் சாலையில் போகாமல் தஞ்சாவூர் – கும்பகோணம் வழியில் போவதைக் கவனித்த ஆச்சி டிரைவரை நிறுத்தச் சொன்னார்.

ஏப்பா இங்கே போறே?

ஹைவேய்ல மாறி வந்திட்டியே.

டிரைவர் காரை நிறுத்தினார்.

ஏப்பா தூக்கம் வந்தாக் காரை ஒரு ஓரமா நிறுத்திட்டு கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக்கிட்டு முகம் கழுவி டீ, காபி குடிச்சிட்டுப் போறதுதான் பாதுகாப்பான பயணம்.

செட்டியார் அரைத் தூக்கத்தில் இருந்தவர் விழித்துப் பார்த்தார். சிகப்பி. நான் காரை ஓட்டட்டுமா. அவன் தூங்கட்டும்.

பகல்லே பசுமாடு போறது தெரியாது. ராத்திரி எருமை மாடு போறதா தெரியப் போகுது. கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுந்தம் போறேன்னானாம். உங்களுக்கு ஒன்னும் தெரியாது. நீங்களும் டிரைவரும் ஒருத்தர் மேல் ஒருத்தர் சாஞ்சுக்கிட்டுத் தூங்குங்க. நான் காரை ஓட்டுறேன்.

எல்லோரும் ஒரு நிறம். எல்லோரும் மனிதர்கள் என்று நினைக்கும் ஆச்சியின் யுகதர்மம் ராஜ்மோகனை ஆச்சர்யப்படுத்தியது.

ஆச்சி. நீங்களும், அய்யாவும் பின்னாலே இருங்க. நான் காரை ஓட்டுறேன்.

சரி தம்பி. திருச்சி போய் கானாடுகாத்தான் பக்கம் போங்க.

ராஜ்மோகன் காரை ஓட்டினார்.

கார் கும்பகோணம் சாலையை விட்டு திருச்சியை நோக்கிச் சென்றது.

தம்பி, கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்துதுன்னு சொல்லுவாங்க. அந்தக் கும்ப கோணத்தைச் சுத்தித்தான் பல திருக்கோயில்களும், நவக்கிரகங்களும் இருக்கு.



அப்படியா, ஆச்சி.

ஆமா. தம்பி.

சொல்லுங்க ஆச்சி. கேட்டுக்கிட்டே கார் ஓட்டுறேன்.

1) கரு உருவாக – கருவளர்ச்சேரி
2) கரு பாதுகாத்துச் சுகப்பிரசவம் பெற – திருக்கருகாவூர்
3) நோயற்ற வாழ்வுக்கு – வைத்தீஸ்வரன் கோவில்
4) ஞானம் பெற – சுவாமி மலை
5) கல்வி கலை வளர்ச்சிக்கு – கூத்தனூர்
6) எடுத்த காரியம் வெற்றி வெற – பட்டீஸ்வரம்
7) வேலை, உயர்பதவிக்கு – கும்பகோணம் பிரம்மன்
8) செல்வம் பெற – ஒப்பிலியப்பன் கோயில்
9) கடன் நிவர்த்தி பெற – திருச்சேறை சரபரமேஸ்வரர்
10) இழந்த செல்வத்தை மீண்டும் பெற – திருவிடைமருதூர் (மகாலிங்கசாமி)
11) பெண்களின் ருது பிரச்சனைக்கு – கும்பகோணம் காசிவிசுவநாதர் கோயில் – நவகன்னிகை
12) திருமணத் தடை நீங்க – திருமணஞ்சேரி
13) நல்ல கணவனை அடைய – கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் (மங்களாம்பிகை)
14) கணவன் மனைவி ஒற்றுமை – திருச்சத்திமுற்றம்
15) பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர – திருவலஞ்சுழி
16) பில்லி, சூன்யம், செய்வினை நீங்க – அய்யாவாடி ஸ்ரீ பிரத்தியங்கர தேவி
17) கோர்ட் வழக்குகளில் வெற்றி பெற – திருப்புவனம் சரபேஸ்வரர்
18) பாவங்கள் அகல – கும்பகோணம் மகாமகத் திருக்குளத்தில் நீராடல்
19) எம பயம் நீங்க – ஸ்ரீவாஞ்சியம்
20 நீண்ட ஆயுளுக்கு – திருக்கடையூர்.

ஆச்சி MASTER OF ALL SUBJECTS என்று மனதிற்குள் பாராட்டியபடி ராஜ்மோகன் நிதானமாகக் காரை ஓட்டிச் சென்றார்.

ஆச்சி தொடர்ந்தார்.

தம்பி ஒரு கோயில் இங்கேயே இருக்கு. இங்கே மறுபிறவி இல்லாதவங்க மட்டும்தான் போக முடியும். இங்கே போக நெனைச்சாப் பல தடைகள் வரும் 365 நாட்களும் இங்கே சிவன்

மேலச் சூரியஒளிபடும். இங்கே அகத்திய முனிவர் பல தடவைகள் அதிகாலையில போக முயற்சி செஞ்சிருக்காரு. முடியலே. ஆண்டுக்கு ஒரு தடவை இங்கே நல்ல பாம்பு வந்து சிவனுக்கு வில்வ இலையால பூஜை செஞ்சு தன் தோலைச் சிவனுக்கு மாலையாப் போட்டுட்டுப் போகுதாம். இது கலியுக அதிசயங்கள்ல ஒன்னா நடக்குது. இங்கே பிரதோஷம் அன்னைக்குத் தரிசிக்குறது ஆயிரம் மடங்கு புண்ணியம்.

ராஜ்மோகன் ஆச்சர்யமாகக் கேட்டார்.

இந்தக் கோயில் எங்கே இருக்கு?

ஸ்ரீவிஸ்வநாத சுவாமி ஆலயம், ருத்ராஷ்வரேர், தேய்பெருமாநல்லூர், கும்பகோணம்.

'உண்டென்றிரு தெய்வம் உண்டென்றிருன்னு' மகாகவி பாரதியார் பாடுனதும், 'சித்தமெல்லாம் எனக்குச் சிவமயமே' என்று கண்ணதாசன் பாடுனதும் நூத்துக்கு நூறு உண்மைதான்.

பொழுது விடிந்தது. நன்றாக வெளிச்சம் வந்தது. கார் கானாடுகாத்தானைக் கடந்து பள்ளத்தூர் சாலையில் போக எதிரே இரண்டு பெண்கள் சிரித்துப் பேசியபடி சைக்கிளை ஓட்டி வந்தார்கள். ராஜ்மோகன் சரியான நேரத்தில் பிரேக் போடாமல் விட்டிருந்தால், பல பேர்கள் தெருவில் எதுவும் தெரியாமலே பஞ்சாயத்துக்கு வந்திருப்பார்கள். அந்தப் பெண் பிள்ளைகள் இதைப் பற்றிக் கவலைப்படாமல் போய்க் கொண்டிருந்தார்கள்.

இங்கே படிக்குற காலேஜ் புள்ளைங்க தான்.

இந்த சின்ன ஊர்ல காலேஜா?

ஆமா. தம்பி. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அழகப்பா பல்கலைக் கழகங்களை உருவாக்குனவங்களோட செட்டிநாட்டுல இன்னம் பல பேர்பெற்ற கல்லூரிகள்லாம் இருக்கு.

சொல்லுங்க ஆச்சி. மொஃபைல்ல ரிக்கார்டு பண்ணிக்கிட்டே ட்ரைவ் பண்றேன்.

ஆச்சி சொல்ல ஆரம்பித்தார்.

உ.அ.பெரி.மு. அருணாசலம் செட்டியார் அவங்க மனைவி சீதாலெட்சுமி ஆச்சி பேர்ல 1962-ஆம் ஆண்டு பள்ளத்தூர்ல உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி, காலப்போக்குல பேர் வாங்கி வளர்ந்து, உயர்ந்து மகளிர் கல்லூரியானுச்சு. இங்கே பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி., பி.பி.ஏ.-ன்னு பட்ட வகுப்புகள் நடந்து வருது. மகளிர்க்கான கல்லூரிகளில் இது ஒரு மகுடமா இருக்கு. அடுத்தது சரஸ்வதி நாராயணன் கல்லூரி. கருமுத்து தியாகராஜரின் மாப்பிள்ளை கண்டரமாணிக்கம் லெ. நாரயாணன் செட்டியார் இதை 1957-ல் தொடங்குனாங்க. இங்கே அறிவியல், வேதியல், பொருளியல், பயிரியல், வணிகவியல் எல்லாம் கற்பிக்குறாங்க. இந்தக் கல்லூரி வெள்ளி விழாவை ஒட்டி நாராயணன் செட்டியாரோட மனைவி சரஸ்வதி ஆச்சி 25 லட்சம் செலவுல ஒரு நூலகத்தைக் கட்டிக் கொடுத்திருக்காங்க. மதுரை நகரோட கோபுரங்களைப் போல இது ஒரு கல்விக் கோபுரமா விளங்குது.

காரைக்குடி - கோட்டையூர் ரயில் பாதையில் ரயில் வந்தது. கார் சிக்னலுக்காக நின்றது.

ஆச்சி தொடர்ந்து சொன்னார்.

ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரியை, திருவையாறில் திருப்பணி செஞ்சு புகழ் பெற்ற சேவு. அண்ணாமலை செட்டியார், தேவகோட்டையில் தொடங்கினாங்க. காரைக்குடிக்கு வந்து படிக்க வேண்டிய நெலையில இருந்த,

சிறந்த நூல் ஆசிரியர் விருது

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை 2020-ம் ஆண்டிற்கான வணிகவியல், பொருளியல், மேலாண்மையில் வகைமையில் சிறந்த நூலாக டாக்டர் சோம. வள்ளியப்பன் எழுதிய 'மியூட்சுவல் பண்ட்' புத்தகத்தை தேர்வு செய்து அவருக்கு ரூ.30,000/- பரிசும், சான்றிதழும் அளித்து பெருமை செய்தது. 14.02.2024 அன்று நடைபெற்ற விழாவில் தமிழக செய்தித்துறை துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார். உடன் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. அவ்வை அருள் உள்ளார். சோம. வள்ளியப்பன் அவர்கள் இதுவரை தமிழில் 81 நூல்களும், ஆங்கிலத்தில் மூன்றும், இந்தியில் (மொழிபெயர்ப்பு) ஒன்றும் எழுதியிருக்கிறார். 2010-ல் அவரது நாட்டுக் கணக்கு நூலும் தமிழக அரசின் சிறந்த நூல் பரிசு பெற்றது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. 2022-ம் ஆண்டில் கம்பம் பாரதி இலக்கிய பேரவையின் சிறுகதை நூலுக்கான முதல் பரிசு இவர் எழுதிய ஜெமினி சர்கிள் நூலுக்கு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

வ.உ.சி. நகர், சித்தொரகடம், மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை - 600 053.

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

ஒன்பது கோயில் நகரத்தார்களும் ஒன்றுகூடி வாழும் சின்ன செட்டிநாடாம் அம்பத்தூரில் நகரத்தார்கள் 51 ஆண்டுகளாக செட்டி மகன் முருகனுக்கு **மகேஸ்வர பூஜையிட்டு** வழிபட்டு வருகின்றனர்.

எல்லாம் வல்ல ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவருளால் 2009-ம் ஆண்டு நிறுவப் பெற்ற நமது ஆலயத்தில் தற்போது 3 நிலைகள் கொண்ட 46 அடி உயர இராஜகோபுரம், கொடி மரம் மற்றும் பத்து மலை முருகன் புதிதாக வடிவமைக்கப்பட்டு நிகழும் குரோதி வருடம் சித்திரை மாதம் 9-ம் தேதி **(22.04.2024) திங்கட்கிழமை** சதுர்த்தசி திதி, ஹஸ்த நட்சத்திரம், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை **9.30** மணிக்குமேல் **10.30** மணிக்குள் மிதுன லக்னத்தில் **அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும், ஸ்ரீ கற்பக விநாயகர், ஸ்ரீ தெட்சிணாமூர்த்தி, ஸ்ரீ துர்க்கை, ஸ்ரீ மஹா விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்கும், நூதன இராஜகோபுரத்திற்கும் மஹா கும்பாபிஷேகம்** சிறப்பாக நடைபெற இருக்கிறது.

நகரத்தார் மகேஸ்வர பூஜையை நடத்துவதற்கு **1981**-ம் ஆண்டு முதல் பேருதவியாக இருந்து, அருங்கல்விச் சாலைகளும், அரிய தொழிற்கூடங்களும் அமைத்து அம்பத்தூரில் நகரத்தார்களை சிறப்பாக வாழவைத்துக் கொண்டிருக்கும் **பள்ளத்தூர் அ.மு.மு.குடும்பத்தாரைப்** போற்றுகிறோம்.

தைப்பூசத் திருநாளில் தமிழகத்தின் தென்பகுதியிலிருந்து சுமார் 120 மைல் தூரம் பழநி பாதயாத்திரையில் பல லட்சம் பக்தர்களை பழநி ஆண்டவர் திருவருளால் நன்முறையில் வழிநடத்திச் செல்லும் **"சாமியாடிச் செட்டியார்"** என வழங்கும் மதிப்பிற்குரிய கண்டனூர் திரு. **பழ.பழனியப்ப செட்டியார்** அவர்கள் முன்னிலையில் **குடமுழுக்கு விழா** நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு, சிறப்பித்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவருளைப் பெற வேணுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு யாகசாலை பூஜை நடைபெறும் வேளையில் வேத ஆகம பாராயணமும், திருமுறை பாராயணமும், மங்கள இசையும் நடைபெறும்.

22.04.2024 - மாலை 7.00 மணிக்கு முருகன் வள்ளி தெய்வானை உடன் வெள்ளி ஊஞ்சல்

இரவு 8.00 மணிக்கு உற்சவர் திருவீதி உலா

இங்ஙனம்,

அலைபேசி எண் : 8248193476, 9445067799

நகரத்தார் மகேஸ்வர பூஜை பரிபாலன சபை, அம்பத்தூர்

சாதாரண நிலையில இருந்த பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் இங்கே படிச்சுப் பட்டம் வாங்குனாங்க. இந்தக் கல்லூரியை அன்றைய அமைச்சர் நெடுஞ்செழியன் திறந்து வச்சாரு. ஆண்கள், பெண்கள் கலந்து படிக்குற இந்தக் கல்லூரியில விலங்கியல், வேதியல், இயற்பியல், அறிவியல் எல்லா வகுப்புகளும் நடக்குது. இந்தக் கல்லூரி 1995 -ல் வெள்ளி விழாக் கொண்டாடியது. இந்த நிறுவனரோட மணிவிழா நினைவு வளைவு காரைக்குடி - தேவகோட்டை சாலையில கல்விக்கு அடையாளமாக இருக்குது.

ரயில் வந்து கடந்து போனது.

ராஜ்மோகன் காரை எடுத்தார்.

காரைக்குடி சேந்தணியார் குடும்பத்தைச் சேர்ந்த வள்ளல் இராம.வீர. ராமநாதன் செட்டியார் பேரில் அவர் புதல்வர் இராம. பெரியகருப்பன் செட்டியார் தொடங்கிய தமிழ்க் கல்லூரி. தமிழறிஞர் வ.சுப.-வின் துணையோட தமிழை வளர்க்கப் பொருள் செலவு செய்து 1964-ல் தொடங்குனாங்க. பி.லிட். படிப்பை நடத்தி வருது. நகரத்தாரால் தொடங்கிய இரண்டு தமிழ்க் கல்லூரிகளில் இது தமிழ்த்தாயின் ஆசீர்வாதம் பெற்றது.

ஆச்சி சொல்லி முடித்ததும், ராஜ்மோகன் ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தார்.

சில பேர்கள் கோவில் உண்டியல்ல ஆயிரம், பத்தாயிரம், லட்சம்-னு போடுறாங்களே. அது தர்மமா இல்லே. இது தர்மமா?

தம்பி, உண்மையான கோவில் பிரார்த்தனை வேற. போலித்தனங்கள் வேற. நகரத்தார்கள் அயோத்தியிலேருந்து அமெரிக்கா வரைக்கும் கோவில் பணி செஞ்சவங்கதான். உன் பாவப்பட்ட பணம் பத்தாயிரம் ரூபாயை உண்டியலில் போட்டா அது கடவுளுக்குச் சேராது. உன் உழைப்பில் வந்த ஒரு ரூபாயைக் கல்விக்குக் கொடுத்தா அது கடவுள்ட்ட உடனே சேரும். இட்லிக்கும், கெட்டித் தயிருக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

ஆச்சியின் வீட்டு வாசலில் கார் வந்து நின்றது.

ஆச்சி செட்டியாரைத் தட்டி எழுப்பினார்.

செட்டியார் கொட்டாவி விட்டபடி சொன்னார்.

முழிச்சுக்கிட்டுத்தாங்குறேன் இருந்தேன். எதுக்குத் தட்டி எழுப்புறே.

அதுல கொறைச்சல் இல்லே. ஆட்டுடா பூசாரின்னானாம்.

இறங்கி வந்து உங்க ஊஞ்சல்ல உக்காந்து ஆடுங்க.

எல்லோரும் காரிலிருந்து இறங்கிப் போனார்கள்.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

அமேசான் மழைக்காடு

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்

மரங்கள் மண்ணில் நிலைத்து நிற்க:

தாவர வகைகளில் 40000 இனங்கள் இருக்கின்றன அமேசான் காட்டில். எண்ணிக்கையில் 39 கோடி மரங்கள் இருக்கின்றன. ஆனால் மண் கெட்டிப் படாமல் பொதபொதவென்று இருக்கும். மரங்களுக்கு ஆழமாக வேரோடுவதில்லை. மாறாக மரங்களின் அடிப்பகுதியில் மூன்று, நான்கு மீட்டர் உயரத்திலிருந்து முண்டுகள் வளர்ந்து மரங்களைத் தாங்குகின்றன.

சூரிய ஒளியின் வெப்பத்தால் இலைகளில் நீர் வற்றிப் போகாமல் இருக்க மரங்களின் இலைகளில் ஒருவிதமான மெழுகுப் பூச்சு இருக்கும். வெப்பம் மிக அதிகமானால் இலைகள் பக்கவாட்டில் திரும்பிக் கொள்ளும்.

தேன் மலர்:

ஹெலிகோனியா பூச்செடி அமேசான் காட்டில் பரவலாகக் காணப்படுகிறது. இதன் மலர்கள் மிக அழகானவை. ஹம்மிங் பறவைகள் தேனுண்ண நாடி வருவதும் இந்தப் பூக்களிடந்தான். ஹெலிகோனியாவின் மகரந்தச் சேர்க்கைக்கு ஹம்மிங் பறவைகள் கொரியர் சேவை செய்வதும் இந்த நன்றிக்காகத்தான்.

அமேசான் சாக்லெட்:

இனிமேல் ஒரு நாள் இனிப்பான சாக்லெட் உங்கள் நாவில் கரையும்போது உங்களுக்கு அமேசான் காடு நினைவுக்கு வரும், சாக்லெட்டுக்கான கொக்கோச் செடிகள் 25-30 அடி உயரத்திற்கு அமேசான் காட்டில் வளர்கின்றன.

ஃபேஷன் பூங்கொடிகள்:

மரங்களின் கிளைகளில் ஊஞ்சல் ஆடும் ஃபேஷன் பூங்கொடிகளின் பூக்கள் ப்ளாஸ்டிக் பூக்களைப் போல் இருக்கும். இந்தக் கொடியின் மருத்துவ குணங்கள் இங்குள்ள பழங்குடியினருக்கு நன்கு தெரியும். இதன் இலைகள் சிறந்த வலி நிவாரணி. பழங்கள் நல்ல இருமல் மருந்து.

விக்டோரியா ராணி:

அமேசான் காட்டின் அசுரத்தனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு அமேசான் நதியில் உள்ள விக்டோரியா அல்லிமலர். இதன் இலைகள்தாம் இந்த விக்டோரியா ராணியாருக்குக் காவல் இருக்கும் ராணுவ வீரர்கள். இலைகளின் குறுக்களவு 46 சென்டி மீட்டர் வரை இருக்கும். இலைகள் கனமானவை; மிக மிக வலிமையானவை. ஒரு மனிதன் அந்த இலைமேல் தாராளமாக உட்காரலாம். ஏனென்றால் அது 135 கிலோ எடை வரை தாங்கும். ஆனால் ஒரு சிரமம் இருக்கிறது. இலையில் நிறையக் கூரான பெரிய பெரிய முட்கள் இருக்கும். அது விக்டோரியா அல்லிகளை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் என்கிறார்கள்.

முருமுரு வெண்ணெய்:

அமேசான் ஆற்றின் கரை நெடுக முருமுரு பனை மரங்கள் வளர்கின்றன. இதன் விதைகளில் இருந்து விட்டமின்களும், ஒமேகா கொழுப்புச் சத்தும் நிறைந்த வெண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதன் பழங்களும் சிறந்த உணவு.

படகாய் மிதக்கும் கேபோக்:

அமேசான் காட்டின் அடுத்த அசுரன் கேபோக் மரம். வருடத்திற்கு 13 அடி உயரம் என்ற கணக்கில் 200 அடி உயரம்கூட வளரும். இதன் குறுக்களவு 10 அடி இருக்கும். ஆனால் இது ஓதிய மரம் மாதிரி ஒப்புக்கு வளர்ந்த மரம் இல்லை. கேபோக் மரத்தில்

சிற்பங்கள் செய்கிறார்கள். இந்த மரத்தின் தண்டுகள் எடை குறைவாகத் தக்கை போல் இருப்பதால் ஆற்றில் மிதந்து செல்லும் படகுகள் செய்கிறார்கள். விதைகளில் இருந்து தைலம் தயாரிக்கிறார்கள். மரத்தின் நார்கள் துணி நெசவுக்குப் பயன்படுகின்றன.

அமேசான் மருந்துப் பெட்டகம்:

அமேசான் காட்டில் உள்ள செடி, கொடிகளில் 30000 மருந்துகள் ஒளிந்திருக்கின்றன. நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மேற்கத்திய மருந்துகளில் 25 சதவிகிதம் அமேசான் காட்டு மூலிகைகள் கலந்தவை. இங்கிருக்கும் சின்கோனா மரத்திலிருந்து குயினைன் கிடைக்கிறது. அமேசானில் உள்ள குவெச்சுவா என்ற பழங்குடி இனத்தவர் சின்கோனா மரத்தின் பட்டையை நீரில் கொதிக்க வைத்தால் இனிப்பான பானம் கிடைக்கிறது. அது அவர்களின் தசைப் பிடிப்பிற்கு சுகமளிக்கிறது. மலேரியாக் காய்ச்சலைக் குணப்படுத்துகிறது.

அமேசானில் காணப்படும் கொக்கோ மரம் கொக்கோயின் என்ற போதைப் பொருளைத் தருவதாகச் சொல்லி முகம் சுளிக்கலாம். ஆனால் அறுவை சிகிச்சைக்குமுன் பயன்படித்தும் மயக்க மருந்துகளில் நோவோகைனும், லிடொக்கைனும் கொக்கோச் செடியிலிருந்து பெறப் பட்டவைதாம்.

க்ளுகோமா கண்பார்வைக் குறைபாட்டுக்கு பயன் படுத்தும் பிலொகார்பைன் மருந்து தயாரிக்க அமேசானின் ஜாபோரண்டி மூலிகை பயன்படுத்தப்படுகிறது.

அமேசானின் பழங்கள்:

அமேசானில் கிடைக்கும் பழங்களில், குயினோவாவும், மெக்காவும் ஏற்கனவே வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பிரியமான உணவுகளாகி விட்டன. ஆரஞ்ச், எலுமிச்சை, மாம்பழங்களில்கூட, அமேசான் காட்டில் விளைந்தவை அபரிமிதமான விட்டமின்களும், மினெரல்களும் உடையவை.

காமு காமு பழம் கொஞ்சம் புளிக்கும். ஆனால் விட்டமின் சி நிறைய உள்ளது. சளிக்கட்டைப் போக்கும். அதனால் பிரபலமாகி வருகிறது.

அகுஜாயே பழத்தில் நிறைய விட்டமின், புரோட்டீன் இருந்தாலும், குளிர் பானம், ஜாம், ஐஸ்க்ரீம் செய்யப் பயன்பட்டாலும் அது பெண்களுக்குப் பேருதவி செய்து இப்போது பிரபலமாகி விட்ட்து. பெண்களின் மாதவிடாய் காலத்தில் ஹார்மோன்களைச் சமன் செய்யவும், உடல் சூட்டைக் குறைக்கவும், கருத்தரிக்கும் திறனை மேம்படுத்தவும் உற்ற தோழியாகி விட்டது.

அமேசான் காட்டில் நெருப்பு:

அமேசான் மழைக் காட்டில் வேதனைக்குரிய செய்தி என்னவென்றால், தொடர்ந்து பல இடங்களில் நெருப்பு பற்றி எரிந்து கொண்டிருப்பதுதான். தென்மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவின் சில பகுதிகளிலும் காடுகள் தீப்பிடிக்கின்றன என்றால், அதற்குக் காரணம்: கோடை காலத்தில் பூமியில் வெப்பம் எகிறி அடிப்பதும், காற்றில் வறட்சி அதிகரிப்பதும்தான். இது இயற்கையின் சீற்றம். ஆனால் அமேசான் காட்டில் இயற்கையாகத் தீப்பிடிக்க 'வாய்ப்பில்லை ராஜா!' என்கிறார்கள். ஏனென்றால் அமேசான் காட்டில் வருடம் முழுதும் காற்று

ஈரமாகவே இருக்கும். அடிக்கடி மிதமான சாரல் மழை அடித்துக் கொண்டே இருக்கும்.

அப்படியானால் இந்தக் கொடுமைக்கு எது அல்லது யார் காரணம்? பிரேசில், பெரு நாடுகளின் சட்டங்களுக்குப் புறம்பாகக் காட்டின் பகுதிகளை அழித்து நிலத்தைக் கையகப்படுத்திக் கொள்ள நினைக்கும் மனிதர்களின் பேராசைதான் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. 'திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது. அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது.' 2019 - 2022 வரை இருந்த பிரேசில் அதிபர் இதற்கு மறைமுகமாக ஆதரவளித்தார். இப்போதுள்ள அதிபர் கட்டுப்படுத்த நினைக்கிறார் என்கிறார்கள்.

இயற்கையோடு இயைந்து வாழாமல், அழித்து வாழ ஆசைப்படும் போக்கை மனிதர்கள் குறைத்துக் கொண்டால் மனித இனம் பன்னெடுங்காலம் நிம்மதியாகவும், வளமாகவும் வாழ முடியும். ♦

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (சுரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும் வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

வெள்ளி விழா

சென்னை சைதாப்பேட்டை, டயானா பள்ளியின் 25ஆம் ஆண்டு விழா 17.02.2024 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், சினிமா தயாரிப்பாளருமான பழ. கருப்பையா, கவிமாமணி பேராசிரியர் திரு. தி.மு. அப்துல்காதர், கலைமாமணி திரு. S. ஏர்வாடி ராதாகிருஷ்ணன், டோல்மேட்டிக் குரூப் முதன்மைச் செயல் அலுவலர் லேனா நடராஜன் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். பள்ளி தாளாளர் கல்யாணி சிதம்பரம், நிறுவனர் சிதம்பரம் விழா நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்திருந்தனர்.

புதிய கட்டிடத் திறப்பு விழா

நகரத்தார் ஆண்கள் குருபீடம் பாதரக்குடி மடம் புதிய கட்டிட திறப்பு விழா 07-03-2024 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேவகோட்டை ஜமீன்தார் திரு. சோம. நாராயணன் செட்டியார் மற்றும் அருளடியார் கண்டனூர் திரு. பழ. பழனியப்ப செட்டியார் ஆகியோர் முன்னிலையில் இறை நீதி அண்ணல் ராஜகோபுரம் மாண்புமிகு நீதி அரசர் டாக்டர் மெ. சொக்கலிங்கம் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். விழாவிற்கு கண்டரமாணிக்கம் திரு எம். சிஎன். மாணிக்கம் செட்டியார் தலைமை ஏற்று உரையாற்றினார். கண்டனூர் திரு. பழ. பழனியப்ப செட்டியார், துலாவூர் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர், பாதரக்குடி ஸ்ரீ மதுரவீந்திர சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினர். கட்டிட வரைபடம் தயாரித்த ராங்கியம் திரு.ஆர். சிவா, கட்டிடப் பொறியாளர் வேகுப்பட்டி திரு. எம். நாகப்பன் மற்றும் நன்கொடை வழங்கிய பெருமக்கள் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

மகா கும்பாபிஷேகம்

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரங்கினாம்பட்டி ஆதி காலத்து பிள்ளையார் நூதன ஆலய ஜீரணோதாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 19-02-2024 திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிக்குள் அரங்கினாம்பட்டி பிள்ளையார் மற்றும் நவகிரகங்களுக்கு நூதன ஆலய ஜீரணோதாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெரும்சாந்தி பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. பக்தகோடிகளும், மெய்யன்பர்களும், கிராம பொதுமக்களும் திரளாக்க் கலந்து கொண்டு அரங்கினாம்பட்டி பிள்ளையார் அருள் பெற்றனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருள்மிகு கோட்டைக்கருப்பண்ண சுவாமிதிருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 21-02-2024 புதன்கிழமை அன்று காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ கோட்டைக் கருப்பர், ஸ்ரீ சங்கிலிக் கருப்பர், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ ராக்காச்சி அம்மன், ஸ்ரீ பேச்சியம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மாண்புமிகு தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. ஆன்மிகப் பெரியோர்களும், பக்தகோடிகளும்,மெய்யன்பர்களும், நாட்டார், நகரத்தார்களும், ஊர் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு அருள்மிகு கோட்டைக் கருப்பண்ண சுவாமியின் திருவருள் பெற்றனர்.அறங்காவலர் மற்றும் திருப்பணிக் குழுத் தலைவர் குமரன் பதிப்பகம் எஸ். வைரவன் மற்றும் அறங்காவலர்கள்,திருப்பணிக்குழு உறுப்பினர்கள் கும்பாபிஷேக திருப்பணி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

Form IV (See rule 8)

REGISTRATION OF NEWS PAPERS (CENTRAL) ACT - 1956

Namadhu Chettinad magazine

1.Place of Publication	: Chennai - 600006
2.Periodicity	: Tamil - Monthly
3.Printer's Name	: N.Avadaiappan,
Whether Citizen of india	: Yes
Address	: 14/9, Parthasarathy Nagar, 8th street extn, Adambakkam, Chennai - 600 088,
4.Publisher's Name	: N.Avadaiappan, M/S Chettinad Print media (p) Ltd, 3rd floor, Rani Seethai Hall Building No.603, Anna Salai, Chennai 600 006.
5.Editor's Name	: N.Avadaiappan,
Whether Citizen of india	: Yes
Address	: 14/9, Parthasarathy Nagar, 8th street extn., Adambakkam, Chennai - 600088.
6. Name and address of individual who own the news paper and Partners or Share holders holding more than one percent of total capital	: Chettinad print media (p) Ltd., Rani Seethai Hall, 603, Anna salai, Chennai 600 006.

I, N.Avadaiappan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) N.Avadaiappan
PUBLISHER

Date: 10.03.2024 On behalf of Chettinad print media (p) Ltd.

நமது செட்டிநாடு சந்தா படிவம்

திரு/திருமதி.....

முகவரி.....

.....

கோவில்.....பிரிவு.....சொந்த ஊர்.....

கைபேசி..... தொலைபேசி..... ▸▸ இமெயில் .....

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.....

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி...../ எண்...../ நாள்.....

அனுப்ப வேண்டிய முகவரி: "நமது செட்டிநாடு" (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

Cheque to be drawn in favour of

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

டிடி/காசோலை அனுப்ப அஞ்சல் துறையின் துரித அஞ்சல் (Speed Post) சேவையைப் பயன்படுத்துங்கள்

Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

COMTECH & ESPEETECH

15/11, KADAMBADI AMMAN KOIL STREET, VALASARAWAKAM , CHENNAI 600087, TAMIL NADU.

MAJOR COMPLETED PROJECTS

- Orient Cements, Karnataka. (Period- 2014-16)
- Wonder Cement Line 2, Rajasthan. (Period- 2014-16)
- Shree Cements, Grinding Unit, Bihar. (Period- 2016-18)
- Wonder Cement Grinding Unit, Maharashtra. (Period- 2017-18)
- Wonder Cement Clinker Wagon Bulk Loading, Rajasthan. (Period- 2017-18)
- KCP Cements Line 2, Andhra Pradesh. (Period- 2017-18)
- Wonder Cement Line 3, Rajasthan. (Period- 2018-19)
- TANCEM Line 2,Tamil Nadu. (Period- 2016-19)

ONGOING PROJECTS

- Chettinad Cement, Kallur, Karnataka (Period - 2022 - Present)
- Vizag Vessel Project, Naval Ship Building Centre Vizag (L&T). (Period- 2004-Present).
- Chettinad Cements, Andhra Pradesh. (Period- 2018-Present).
- Fabrication of Plate work for LNV Technology, at Ambuja cements, Rajasthan.(Period – 2019 –Present)
- Mechanical work at Ultratech cements Limited, Bara cement works,Uttar Pradesh. (Period – 2020 –Present)
- Fabrication and Erection of Carbon Steel Tank at TNPL Unit – II,Trichy, Tamil Nadu.(Period – 2020-Present)
- Fabrication and Erection of Fabricated Equipment for Humboldt wedag India Private Limited at ACC Ametha, Madhya Pradesh.(Period – 2020-Present)
- Fabrication and Erection of Steel Chimney and Tanks at TNPL Unit – II, Manaparai, Tamil Nadu. (Period – 2020-Present).
- Mechanical work at Ultratech cements Limited, Dalla cement works, Sonebhadra, Uttar Pradesh. (Period – 2021 – Present).

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2022-2024
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2022-2024 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 March - 2024

Chettinad
Hospital & Research
Institute

Won Award in
CII TN's MedClave Center of
EXCELLENCE
HONOURS '22
for the Speciality
DIAGNOSTIC CENTER - LABORATORY

CII
Confederation of
Indian Industry

www.care.edu.in